# சுபீட்சம்

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

சுபீட்சம் மின்னிதழை பார்வையிட www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 06.06.2023 supeedsam.com supeedsam@gmail.com


# அடுத்த வருட ஆரம்பத்தில் ஜனாதிபதித் தேர்தல்

அடுத்த வருட ஆரம்பத்தில் ஜனாதிபதி தேர்தலை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அண்மையில் ஆளும் கட்சியினரை அழைத்து பேசியமையானது ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கான முன் ஏற்பாடாக இருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அமைச்சரவை உறுப்பினர்கள், ஆளும் கட்சியின் தலைவர்கள் மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மாவட்ட தலைவர்களை

02 ஆம் பக்கத்தில்...



## தேர்தலைக் கண்டு அஞ்சி ஓடும் ரணில் - மொட்டு அரசு!



தேர்தல் மீது மக்களுக்கு அக்கறையில்லை என்று கூறிவிட்டு தேர்தலைப் பிற்போடுவது அப்பட்டமான ஜனநாயக மீறல் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

'பொதுமக்களில் பெரும்பாலானோருக்கு தேர்தல் அரசியல் மீது தற்போது நம்பிக்கையில்லை' என்று நுவரெலியா கிராண்ட் ஹொட்டலில் நடைபெற்ற தேசிய சட்ட மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கருத்துத் தெரிவித்திருந்தார்.

02 ஆம் பக்கத்தில்...

## மக்கள் தேர்தலை விரும்பவில்லை எனக் கூறும் ஜனாதிபதியின் கருத்து சிரிப்பிற்குரியது!



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலை நடாத்தினால் தான் தோற்றுவிடுவேன் என நம்பி தேர்தலை நிறுத்திவிட்டு, மக்கள் தேர்தலை விரும்பவில்லை எனக் கூறும் கருத்து சிரிப்பிற்குரியது என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னியின் தலைவர் சுரேஷ் க.பிறேமச்சந்திரன் தெரிவித்தார்.யாழில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே இவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் வி்க்கிரமசிங்க தேசியப் பட்டியலூடாக நாடாளுமன்றத்திற்குள் வந்தார்.

பின் மக்களின் எதிர்ப்பால் கோட்டபாய ராஜபக்ச மற்றும் மகிந்த ராஜபக்ச ஆகியோர் பதவியை இராஜிநாமா செய்ததன் பின்னர் தெரிந்தோ தெரியாமலோ பிரதமராக வந்தார்.மக்களின்

02 ஆம் பக்கத்தில்...

## சமல் நாட்டின் ஜனாதிபதியாக இருந்திருந்தால் நாடு இந்த நிலைமைக்கு வந்திருக்காது



கோட்டாபய ராஜபக்சவிற்கு பதிலாக சமல் ராஜபக்ச நாட்டின் ஜனாதிபதியாக இருந்திருந்தால் நாடு இந்த நிலைமைக்கு வந்திருக்காது என பெங்கமுவே நாலக தேரர் தெரிவித்துள்ளார்.

வார இதழ் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

## புதிய கூட்டணியை உருவாக்க தயாராகி வரும் அரசியல்வாதிகள்

புதிய அரசியல் கூட்டணியை உருவாக்க அரசியல்வாதிகள் சிலர் தயாராகி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனடிப்படையில் எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் சில கட்சிகள் மற்றும சிலர் இணைந்து இந்த கூட்டணியை உருவாக்க உள்ளதாக பேசப்படுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் குமார வெல்கம, சம்பிக்க ரணவக்க, ராஜித சேனாரத் மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து

02 ஆம் பக்கத்தில்...


"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH

Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt

CEO

Eidgenössische Finanzmarktaufsicht Nr:35302

Fachmann für versicherung & vorsorge

Hauptstrasse 54

6015 Luzern

Switzerland

079 8000 100

arulnages@yahoo.com

finma :34598

25605: cicero




## அமைச்சுப் பதவிக்காக ரணிலின் காலில் விழவில்லை!

மொட்டுக் கட்சியால் தான் இந்த அரசு இயங்கு நிலையில் உள்ளது. எனவே, மொட்டுக் கட்சியினரைப் புறக்கணித்து இந்த அரசால் எதனையும் செய்ய முடியாது.

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவித்ததாவது:-

02 ஆம் பக்கத்தில்...


MATHE BILDUNGSZENTRUM

கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை

பள்ளித் தலமனைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.

அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!

உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..

எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!

- MATHE BILDUNGSZENTRUM

S.MAHENDIRAN

076 431 83 79

mbz.mahe@gmail.com

Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

MATHE மட்டுமல்ல

Deutsch, Franzósisch, Englisch,Gymi Prüfung

BMS, HMS, FMS, Gymi Probe

அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்

Oerlikon, Uster, Schaffhausen

# சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட கரையோரத்தை தூய்மைப்படுத்தும் நிகழ்வு





(ஹஸ்பர்)

சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட கரையோரத்தை தூய்மைப்படுத்தும் நிகழ்வானது (05) கிண்ணியா கடற்கரை பூங்காவை அண்மித்த கரையோர பகுதியில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களம் ஆகியன இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு பல செயற்பாடுகள் ஒரு வாரமாக நடைபெற்ற வண்ணம் இருக்கின்றன. இவ்வருடம் மே மாதம் 30 ஆம் திகதியிலிருந்து ஜுன் மாதம் 05 ஆம் திகதி வரையான வாரம் தேசிய சுற்றாடல் வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய நாடுகளின் சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டத்தினால் இவ்வருடத்தின் சர்வதேச சுற்றாடல் தின விழாவின் தலைப்பாக ''Beat Plastic Pollution எனும் தொனிப் பொருள் முன்வைக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 'பிளாஸ்டிக் மூலம் ஏற்படக் கூடிய மாசைத் தடுப்போம்' எனும் தொனிப் பொருளில் இவ்வருடம் சர்வதேச சுற்றாடல் தினம் கொண்டாடப்படுவது குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.கனி , துறைசார் அதிகாரிகள், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு உத்தியோகத்தர்கள், கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்கள உத்தியோகத்தர்கள், கிண்ணியா பொலிஸ் உத்தியோகத்தர்கள், கடற்படை உத்தியோகத்தர்கள், இராணுவ படை உத்தியோகத்தர்கள், சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கண்ணகி அம்மன் ஆலய உற்சவத்தின் தீமிதிப்பு




(ந.குகதர்சன்)

வாழைச்சேனை புதுக்குடியிருப்பு கோராவெளி கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த சடங்கு உற்சவத்தின் தீமிதிப்பு ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

கடந்த புதன்கிழமை திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமான சடங்கு உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை தீமிதிப்பு மற்றும் திருக்குளிர்த்தியுடன் நிறைவு பெற்றது.

தீ மிதிப்பில் நூற்றுக்கணக்கில் சிறுவர் முதல் பெரியவர்கள் வரை தங்கள் வேண்டுதலை வேண்டி தீ மிதிப்பில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி சீ.யோகேஸ்வரனால் பூசைகள் யாவும் இடம்பெற்றது. வியாழக்கிழமை அன்று கல்யாணகால் வெட்டுதல், திருக்கல்யாணம் என்பன இடம்பெற்று, சனிக்கிழமை மடிப்பிச்சை எடுத்தல், நெல்குற்றும் சடங்கு என்பன இடம்பெற்றதுடன் ஞாயிற்றுக்கிழமை காலை திருக்குளிர்த்தி பாடலுடன் இனிதே சடங்கு நிறைவடைந்தது.

## புதிய கூட்டணியை உருவாக்க தயாராகி வரும்...

விலகி சுயாதீனமாக செயற்பட்டு வரும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து இதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றனர்.

அவர்கள் உத்தியோகபூர்வ எதிர்க்கட்சியில் இருந்து விலகி சுயாதீனமாக செயற்படவும் எதிர்காலத்தில் தேர்தலில் இணைந்து போட்டியிடுவது தொடர்பாகவும் ஏற்கனவே பேச்சுவார்த்தைகளை நடத்தி வருவதாக அரசியல் தரப்பு தகவல்கள் கூறுகின்றன.

## சமல் நாட்டின் ஜனாதிபதியாக இருந்திருந்தால்

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

'இந்த சமூகத்தில் ராஜபக்சர்கள் முன்னேற நிறைய இடங்கள் உள்ளன. நீங்கள் கூறுவது போல் இந்த நாட்டில் நடக்கும் அனைத்து பிரச்சினைகளையும் வெளியே எடுத்து ராஜபக்சாக்களை அழிக்கும் முயற்சியே தற்போது நடைபெறுகின்றது. ராஜபக்சாக்கள் 100 வீதம் சரியானவர்கள் என்று நாங்கள் கூறவில்லை.' என தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதலும் ராஜபக்சர்களின் செயல் என்று சிலர் கூற முயற்சிப்பதைப் பார்த்தோம். இதுபோன்ற செயல்களை செய்வது கோழைத்தனம் என்று நினைப்பதாக தெரிவித்தார். ராஜபக்சர்களை வெள்ளையடிக்க நாங்கள் தயாராக இல்லை. அவர்கள் தவறு செய்தால் அதனை தவறு என்று தெரிவிப்போம். ஆனால் இந்த நாட்டில் நடக்கும் அனைத்து தவறுகளுக்கும் ராஜபக்சர்கள் மீது பழி போட வேண்டும் என்பதில் எங்களுக்கு உடன்பாடு இல்லை என தெரிவித்தார்.

கோட்டாபய ராஜபக்ச மீது நாம் கொண்டிருந்த நம்பிக்கையை அவர் முற்றாக அழித்ததாக கூறுகின்றோம். இந்த நாட்டின் பெரும்பான்மை மக்கள் அவர் மீது வைத்த நம்பிக்கையை சிதைத்ததற்கு அவர் பொறுப்பேற்க வேண்டும். அதற்காக அவர் தண்டிக்கப்பட வேண்டும்.

இன்றும் சிலர் எங்களை அழைத்து குற்றம் சாட்டுகிறார்கள்.தற்போது இதுவரை வெளிவராத இரகசியம் ஒன்றைச் சொல்கிறேன். அன்றைய தினம் ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்புமனுக்கள் வழங்கப்பட்ட போது, சமல் ராஜபக்சவை வேட்பாளராக முன்னிறுத்துமாறு நான் பரிந்துரைத்தேன்.

எனினும் அப்படி நடக்காத காரணத்தாலும், பாதுகாப்புச் செயலாளராக கோட்டாபய நாட்டுக்கு ஆற்றிய சேவையை நினைத்து அவரை ஜனாதிபதியாக்குவதற்கும் கடுமையாக உழைத்தோம். அப்போது சமல் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்மொழியப்பட்டிருந்தால், நாடு இந்த நிலையை அடைந்திருக்காது என நான் இன்னும் நம்புகிறேன்' என தெரிவித்தார்.

## அடுத்த வருட ஆரம்பத்தில்

ஜனாதிபதி செயலகத்திற்கு அழைத்து அரசாங்கத்தின் வேலைத்திட்டங்கள் குறித்து தெளிவுப்படுத்தியிருந்தார்.

இது அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கான முன் ஏற்பாடாக இருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது. எதிர்மறை மட்டத்தில் இருந்து வந்த நாட்டின் பொருளாதாரத்தை சற்று முன்நோக்கி கொண்டு வந்துள்ளதாகவும் எதிர்வரும் செப்டம்பர் மாதமளவில் நேர்மறை மட்டத்திற்கு கொண்டு வர முடியும் எனவும் ஜனாதிபதி இதன் போது கூறியுள்ளார். இதனால், மக்கள் மத்தியில் சென்று அரசாங்கத்தின் வேலைத்திட்டங்கள் பற்றி விளக்குமாறு ஜனாதிபதி, அமைச்சர்கள் மற்றும் பொதுஜன பெரமுனவின் தலைவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

எந்த தேர்தலை எதிர்கொள்ளவும் கிராம மட்டத்திற்கு என்று அதற்கான பின்னணியை உருவாக்குமாறும் ஜனாதிபதி கோரியுள்ளதாக தெரியவருகிறது.

## தேர்தலைக் கண்டு அஞ்சி ஓடும் ...

இது தொடர்பில் விமல் வீரவன்ஸவிடம் கேட்டபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலைக் கண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அவர் தலைமையிலான மொட்டு அரசும் அஞ்சி ஓடுகின்றமை ஜனாதிபதியின் உரையிலிருந்து வெளிப்படையாகத் தெரிகின்றது. மக்களின் ஆணையை இழந்த அரசால் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற முடியாது. நிலையான அரசு ஒன்று இருந்தால் தான் நாட்டின் பொருளாதார வளர்ச்சி சமாந்தரநிலைக்கு வரும். எனவே தேர்தல் ஒன்று மிகவும் அவசியம். தேர்தல் மீது மக்களுக்கு அக்கறையில்லை என்று கூறிவிட்டு தேர்தலைப் பிற்போடுவது அப்பட்டமான ஜனநாயக மீறல் என்றார்.

## அமைச்சுப் பதவிக்காக ரணிலின் காலில் விழவில்லை!

மொட்டுக் கட்சியினர் எவரும் அமைச்சுப் பதவி வேண்டும் என்று ஜனாதிபதியின் காலில் விழவில்லை.

அமைச்சுப் பதவியை யாருக்கு வழங்க வேண்டும், யாருக்கு வழங்கக் கூடாது என்று முடிவெடுக்க அவருக்கு முழு உரித்துண்டு.

மொட்டுக் கட்சியால் தான் இந்த அரசு இயங்கு நிலையில் உள்ளது. எனவே மொட்டுக் கட்சியினரைப் புறக்கணித்து இந்த அரசால் எதனையும் செய்ய முடியாது. இந்த அரசு மொட்டு அரசுதான்.

மக்கள் ஆணை இன்னமும் இந்த அரசுக்கு உண்டு. எந்தத் தேர்தல் நடந்தாலும், அதை எமது கட்சி நிரூபித்துக் காட்டும். - என்றார்.

## மக்கள் தேர்தலை விரும்பவில்லை எனக் கூறும் ...

எதிர்ப்பால் கோட்டபாய நாட்டை விட்டு ஓடியதும் சட்ட வழிமுறையின் பிரகாரம் ஜனாதிபதியாக வந்தார். ஆனால் மக்களால் தெரிவுசெய்யப்படாத ஜனாதிபதியாகக் காணப்படும் நிலையில் மக்களும் அரசியல் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் இவரை ஏற்றுக்கொள்ளாத நிலையில் தான் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.அவர் தேல்தலை நடாத்தி தனது பலத்தை வெளிப்படுத்துவதன் மூலமே மக்கள் மத்தியில் இந்தக் கருத்துக்கள் இல்லாமல் போகும். பொருளாதார பீதியாக நாட்டை ரணில் விக்கிரமசிங்க முன்னேற்றி விட்டார் எனக் கூறப்பட்டாலும் இந்த நாட்டினுடைய 53 பில்லியன் டொலர் கடன்கள் இதுவரை திருப்பச் செலுத்தப்படாது கால அவகாசங்கள் கோரப்பட்டுள்ளது. கால அவகாசத்தை இந்தியா , சீனா உட்பட உலக நாடுகள் பல வழங்கியுள்ளன.நாட்டின் டொலர் பற்றாக்குறையால் நூற்றுக்கணக்கான பொருட்களின் இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளது. தற்போதும் வாகன இறக்குமதி முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளது.

நாட்டினுள் வரும் சுற்றுலாப் பயணிகளால் நாட்டிற்குள் டொலர் வருகின்றது என்பது யதார்த்தமான உண்மை. ஆயினும் இந்த நாட்டிற்கான இறக்குமதிகளை முழுமையாக திறந்து விடப்படுமிடத்தோ , கடனை மீளச் செலுத்துமிடத்தோ நாடு வங்குரோத்து நிலைக்கு மீண்டும் செல்வதற்கான வாய்ப்புக்கள் அதிகமுள்ளது.

நாட்டில் கடன் வாங்குவதை தவிர வெளிநாட்டு முதலீடுகளின் வருகை அதிகரித்ததாக தெரியவில்லை. புலம்பெயர் தமிழ் மக்களின் உதவிகள், முதலீடுகளை எதிர்பார்கின்றாரே தவிர வேறு வழிகளி்ல் முதலீடுகளைக் கொண்டுவருவதற்கான நடவடிக்கை எவையும் அவரிடம் காணப்படவி்ல்லை.

இதைவிட இரண்டு நாட்களுக்கு முன் ஜனாதிபதி ஆற்றிய உரையில் இலங்கை மக்கள் தேர்தலில் அக்கறை காட்டவில்லையெனவும் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதிலே அக்கறையாக உள்ளார்கள் என்ற கோணத்தில் கருத்து வெளியிட்டுள்ளார்.

கடந்த ஓரிரு மாதத்திற்கு முன் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேலைகளில் விடுப்பெடுத்து பணத்தைச் செலவு செய்து கட்டுப்பணத்தைக் கட்டியிருந்தார்கள்.உள்ளூராட்சி சபைகள் ஜனநாயக முறையில் கொண்டு நடாத்தப்பட வேண்டும் என்ற முறையில் தேர்தலில் போட்டியிட தயாராகவிருந்தார்கள்.

தனக்கும் தேர்தல் நிறுத்தத்திற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை என ஜனாதிபதி கூறியிருப்பினும் அவர்தான் பொறுப்பு என்ற நிலவரம் காணப்பட்டது.தேர்தலை நடாத்தினால் தான் தோற்றுவிடுவேன் என நம்பி தேர்தலை நிறுத்திவிட்டு, மக்கள் தேர்தலை விரும்பவில்லை எனக் கூறும் கருத்து சிரிப்பிற்குரியது.

அதைவிட அடுத்த வருட முற்பகுதியில் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக அவரும் அவரது கட்சியினரும் பல தடவை கூறி வரும் நிலையில் அந்த தேர்தலுக்கு மக்கள் ஆர்வமாக உள்ளனரா என்ற கேள்வி எழுகின்றது.மக்கள் யாரும் தேர்தலை நடாத்தக் கூடாது என்ற கோரக்கையை வைத்ததில்லை.

எனவே இந்த நாட்டிற்கு உள்ளூராட்சி சபைத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் நடக்கவில்லை. ஆகவே ஜனாதிபதி தானாக முரண்பட்ட செய்திகளை சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது.ஜனாதிபதியின் கருத்துக்கள் தவறாகக் காணப்படும் தருணம் மக்கள் தேர்தலை ஏற்றுக்கொள்ளவில்லை என கூறுவதானது, அவர் ஜனநாயகத்தை மதிக்கவில்லை என்பதை வெளிப்படுத்துகின்றது. எனவே இவரின் கருத்து முரண்பட்ட தொனியில் பேசுவதையே காட்டுகின்றது. தனது பதவியை தக்க வைப்பதற்காக எடுக்கும் நடவடிக்கைகளாகவே இவை அனைத்தும் காணப்படுவதாக தெரிவித்தார். இதேவேளை கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு அண்மையில் இடம்பெற்ற தாக்குதல் முயற்சி தொடர்பாக கருத்து தெரிவிக்கையில்,இன்று நேற்றல்ல தங்களுக்கு தமிழ் மக்கள் கட்டுப்பட்டவர்களாக இருக்க வேண்டும், தாங்கள் சொல்வதை தமிழ் மக்கள் கேட்க வேண்டும் என்ற பாணியிலே தான் அரச படையினர், பொலிசாரின் நடவடிக்கைகள் காணப்படுகின்றமை வெளிப்படையான உண்மை.திரு யோகேஸ்வரன் யாழ்ப்பாண பாராளுமன்ற உறப்பினராக இருந்த போது பொலிசார், படையினரால் தாக்கப்பட்டிருக்கின்றார். அவரின் வீடு எரிக்கப்பட்டது. முன்னாள்எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அமிர்தலிங்கம் பொலிசாரால் தாக்கப்பட்டிருக்கின்றார்.இ்துபோல் பல்வேறுபட்ட சம்பவங்கள் படையினரால் நடைபெற்றுள்ளன.

சிங்களப் பகுதிகளில் அவ்வாறான சம்பவங்கள் நிச்சயமாக நடைபெறாது என்பது தான் உண்மை. நான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த பேது முல்லைத்தீவில் பொலிசார் என்னை நோக்கி துப்பாக்கியை நீட்டிய சம்பவம் தொடர்பான செய்தி அன்றைய காலகட்டத்தில் சமூக வலைத்தளங்களில் வெளிவந்திருந்தது. கஜேந்திரகுமார் கலந்துரையாடலில் கலந்துகொண்ட போது புலனாய்வுத் துறையினர், பொலிசாரின் நடவடிக்கைகள் நிச்சயமாக கண்டிக்கக்கூடிய விடயம்.

இது அவர்களின் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தின் தன்மையை வெளிப்படுத்தி நிற்கின்றது.பாராளுமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி மக்களாக இருந்தாலும் சரி அவர்களின் சொல்லுக்குக் கட்டுப்பட்டாக வேண்டும் என்ற நிலைப்பாட்டிலுள்ளனர். அதற்கெதிராக குரலெழுப்பும் சந்தர்ப்பத்தில் வேறு வேறு கோணங்களில் பார்க்கப்பட்டு மறுதலிக்கும் சந்தர்ப்பங்களே காணப்படுகின்றன. வடமாகாணத்தில் இவர்கள் சிங்கள மக்களை நடாத்துகின்ற விதமும் தமிழ் மக்களை நடாத்துகின்ற முறையும் வித்தியாசமான அணுகுமுறையை நாம் காண முடிகின்றது.

வடக்கு மாகாணத்திலுள்ள பொலிசாரோ, பாதுகாப்புப் படையினரோ தமிழரைப் பெரும்பான்மையாகப் பிரதிநிதித்துவப்படுத்தி இருக்க வேண்டும்.

இங்கு பெரம்பான்மையாக காணப்படும் சிங்களப் படையினரின் வெளிப்பாடு மக்கள் மீதான அடக்குமுறையின் வெளிப்பாடே. இவை கண்டிக்கப்பட வேண்டிய விடயத்தோடு மாற்றியமைக்கப்பட வேண்டிய விடயங்களாகக் காணப்படுகின்றன. இந் நிலை கஜேந்திரகுமாருக்கு மாத்திரமல்ல. வரலாற்று பீதியாக பல தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இவற்றை அரசாங்கம் கட்டுப்படுத்தாவிட்டால் அரசாங்கம் பேசும் நல்லிணக்கம் முதல் தமிழர்கள் மீது காட்டும் பரிவு என்பன நாாடகமாக இருக்குமே தவிர வேறெதுவும் கிடையாது.– என்றார்

# ஆளுநரின் பங்கேற்புடன் திருமலை மாவட்ட மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு

**(அபு அலா)**



திருகோணமலை மாவட்ட மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய இடத்தில் தீர்வு வழங்கும் நோக்கில், நடமாடும் சேவையொன்றை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் இடம்பெறவுள்ளதாக கிழக்கு மாகாண ஆளுநர் செயலக திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.பாயிஸ் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் அறிவுறுத்தல்களுக்கமைவாக, ஆளுநர் செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நடமாடும் சேவை 07 ஆம் திகதி புதன்கிழமை காலை 11.00 மணியிலிருந்து மாலை 4.00 மணிவரை திருகோணமலை மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள பொதுமக்கள் எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகளை குறித்ததினத்தில் தெரிவிக்க முடியும் எனவும், அவ்வாறு தெரிவிக்கப்படுகின்ற பிரச்சினைகள் பற்றிய விடயங்களை சம்மந்தப்பட்ட மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோர்களுடன் மீளாய்வு செய்யப்பட்டதன் பின்னர், அவர்களுக்கான தீர்வினை அன்றையதினம் 2.00 மணியிலிருந்து கிழக்கு மாகாண ஆளுநரினால் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

குறிப்பாக, அன்றையதினம் பொது மக்களின் பிரச்சினைகளுக்கு மாத்திரமே தீர்வு வழங்கப்படவுள்ளதால், அரச ஊழியர்களின் இடமாற்றம் தொடர்பான எந்தப் பிரச்சினைகளும் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது என்றும் கிழக்கு மாகாண ஆளுநர் செயலக திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.பாயிஸ் சுட்டிக்காட்டினார்.

# சிறுகதை பயிற்சிப் பட்டறை





**(ரக்ஸனா)**

கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், மட்டக்களப்பு மாட்டம் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இளம் எழுத்தாளர்களுக்கான சிறுகதை பயிற்சிப் பட்டறை ஒன்று வெள்ளிக்கிழமை (02.06.2023) பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமை மற்றும் வழிகாட்டுதலில் இடம்பெற்றது.

இளம் எழுத்தாளர்களின் திறமையை மேலும் மேம்படுத்தும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த பயிலரங்கின் வளவாளர்களாக புகழ்பூத்த எழுத்தாளர் உமா வரதராஜன் அவர்களும், அவரோடிணைந்து பிரதி அதிபர் சஜிந்திரன் அவர்களும் கலந்து ஆக்கபூர்வமான வகையில் கருத்துக்களை வழங்கியிருந்தனர்.

பயிற்சிப் பட்டறையின் நிறைவில் கலந்து கொண்டோருக்கான சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி.சத்தியகௌரி தரணிதரன், கலாசார உத்தியோகத்தர் திருமதி வசந்தகுமாரி பற்பராசா மற்றும் கலாசார பிரிவு உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

# ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு கமல்ஹாசன் வாழ்த்து!

**(ஹஸ்பர்)**



கிழக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக நியமனம் பெற்றுள்ள இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் அவர்களுக்கு மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல் ஹாசன் தனது வாழ்த்தைத் தெரிவித்துள்ளார்.

தனது சேவைக் காலத்தில் மக்களின் தேவைகளை அறிந்து எண்ணற்ற சேவைகளை மக்களுக்குச் செய்ய வாழ்த்துத் தெரிவிப்பதாக கமல்ஹாசன் மேலும் தெரிவித்துள்ளார்.

அதற்கு நன்றி தெரிவித்த கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், கமல்ஹாசன் அவர்களைக கிழக்கு மாகாணத்திற்கு வருகை தருமாறு அழைப்பும் விடுத்துள்ளார்.

# வைகாசி சடங்கில் நேர்கடன்!

## இன்று காலை திருக்குளிர்ச்சி!





**(வி.ரி.சகாதேவராஜா)**

கிழக்கில் கண்ணகித்தாயின் வைகாசி திருக்குளிர்த்தி சடங்கின் போது பக்தர்கள் கற்பூரச்சட்டி ஏந்தி பயபக்தியுடன் நேர்கடன் செலுத்தி வருகின்றனர்.

காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த வைகாசித் திங்கள் திருக்குளிர்த்தி பாடும் முக்கிய சடங்கு 06 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை அதிகாலை இடம் பெறும்.

எட்டாம் சடங்கு எதிர்வரும் 12 ஆம் தேதி திங்கட்கிழமை மாலை இடம் பெறும்.

இந்நிகழ்வுகள் அனைத்தும் பண்டைய கலாசார பாரம்பரிய முறைப்படி நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பேண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உலருணவு போதிகள் வழங்கல்






**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

இலங்கை சேவா சர்வதேச அறக்கட்டளை மற்றும் ஸ்ரீ ஆறுமுக நாவலர் அறப்பணி ஊடாக சேவா அமெரிக்கா நிதியுதவியுடன் இந்து ஸ்வயம் சேவக சங்கத்தின் ஏற்பாட்டில் பொருளாதார ரீதியில் சவாலை எதிர்நோக்கும் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உலருணவு பொதிகள் வழங்கப்பட்டன.

அக்கரப்பத்தனை ஹோல்புறுக் பிரதேசத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 60 குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு தலா 25 கிலோ அரிசி 25 கிலோ மா என்ற அடிப்படையில் இப்பொதிகள் (4) ஹோல்புறுக் ஆலய மண்டபத்தில் வழங்கப்பட்டன. இலங்கை சேவா சர்வதேச அறக்கட்டளையின் தலைவர் ஸ்ரீமான் இரா.விஜயபாலன்ஜி, இந்து ஸ்வயம் சேவக சங்க செயற்திட்ட இணைப்பாளர் சாந்தகுமார்ஜி ஆகியோர் தலைமையில் இப்பொதிகளை வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் விசேட அதிதியாக மத்திய மாகாணகல்விப் பணிப்பாளர் அமரசிறி பியதாஸ கலந்துக்கொண்டு பயனாளிகளுக்கு உலருணவு பொதிகளை வழங்கி வைத்தார். இதன்போது இந்து ஸ்வயம் சேவக சங்க செயற்திட்ட இணைப்பாளர் சாந்தகுமார்ஜி அவர்களால் மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் அமரசிறி பியதாஸ பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

# கல்முனை மாநகர சபையின் டெங்கு ஒழிப்பு வார வேலைத்திட்டம் ஆரம்பம்






**(ஏ.எம்.அஸ்லம்)**

நாட்டில் டெங்கு நோய்த் தாக்கம் தீவிரமடைந்து வருகின்ற நிலையில் கிழக்கு மாகாண ஆளுநரின் அறிவுறுத்தலுக்கமைவாக கல்முனை மாநகர சபையினால் டெங்கு ஒழிப்பு வாரம் பிரகடனம் செய்யப்பட்டு, கொத்தணி சுத்திகரிப்பு வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

திங்கட்கிழமை (05) மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் கல்முனை கடற்கரைப் பள்ளி வளாகத்தில் இருந்து இவ்வேலைத் திட்டம் ஆரம்பமானது.

இதன் பிரகாரம் கல்முனை மாநகர சபையின் அனைத்து திண்மக் கழிவகற்றல் வாகனங்களும் ஆளணியினரும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வலயத்தில் பிரதேச ரீதியாக மொத்தமாக களமிறக்கப்பட்டு, குப்பைகள் யாவும் சேகரித்து, அகற்றப்படும் என்று நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய மாநகர ஆணையாளர் அஸ்மி தெரிவித்தார்.

இந்த அடிப்படையில் கல்முனை, சாய்ந்தமருது, பாண்டிருப்பு, மருதமுனை, பெரிய நீலாவணை, நற்பிட்டிமுனை போன்ற பகுதிகளில் சுத்திகரிப்பு பணிகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதனை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு பொதுமக்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் தங்களது வீடு, வளவுகளை துப்பரவு செய்து, உக்கும் கழிவுகளை வேறாகவும் உக்காத கழிவுகளை வேறாகவும் தரம்பிரித்து மாநகர சபையின் வாகனங்களில் ஒப்படைக்குமாறும் குறிப்பாக டெங்கு நுளம்புகளின் பெருக்கத்திற்கு ஏதுவாக அமைகின்ற கொள்கலன்களையும் கழிவுப் பொருட்களையும் தவறாது சேகரித்து ஒப்படைக்குமாறும் இதன்போது அவர் கேட்டுக் கொண்டார்.

இவ்வாறான அறிவுறுத்தல்கள் வீதிகள் தோறும் செல்கின்ற மாநகரசபையின் வாகன ஒருபெருக்கி மூலம் அறிவிப்பு செய்யப்பட்டு வருகின்றன.

இந்நிகழ்வில் கல்முனை மாநகரசபையின் பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், சுகாதாரப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் யூ.எம். இஸ்ஹாக், கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களான ஏ.எல். எம்.பாறுக், எம்.ஜுனைதீன், மாநகர சபையின் பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ்.ஏ.அஹத், திண்மக்கழிவு முகாமைத்துவ மேற்பார்வையாளர் எம்.அத்ஹம் மற்றும் வலய மேற்பார்வையாளர்களும் பங்கேற்று, சுத்திகரிப்பு பணிகளை நெறிப்படுத்தியிருந்தனர்.

# கிழக்கில் சுரங்கம், மணல் அகழ்வு அதிகரிப்பதாகக் குற்றச்சாட்டு!

## மாவட்ட அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்களுக்கு ஆளுநர் விடுத்த உத்தரவு




**(ஹஸ்பர்)**

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களின் அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலாளர்களுடன் பொதுமக்கள் எதிர் நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடினார். குறித்த கலந்துரையாடல் திருகோணமலையில் (4) இடம் பெற்றது.

மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் அதிகமாக சுரங்கம் மற்றும் மணல் அகழ்வு நடைபெற்று வருவதாக குற்றச்சாட்டுகள் கிடைக்கப்பெற்று வருவதால் தற்போது காணப்படும் பொறிமுறை குறித்து விளக்கம் அளிக்குமாறும், சட்ட விரோத சுரங்கம் மற்றும் மணல் அகழ்வுகள் தொடர்ந்தும் நிலவி வருவதால் அது குறித்து ஆய்வு மேற்கொள்ளுமாறும் அரச அதிகாரிகளுக்கு செந்தில் தொண்டமான் பணிப்புரை விடுத்துள்ளார்.


# உலக அறிவிப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீத் அவர்களின் வானலைகளில் ஒரு வழிப்போக்கன்









**(அஷ்ரப் ஏ சமத்)**

உலக அறிவிப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீத் அவர்களின் வானலைகளில் ஒரு வழிப்போக்கன் அரை நூற்றாண்டு அனுபவப் பதிவுகள் நூல் வெளியீட்டு விழா கடந்த 03.06.2023 அன்று கொழும்பில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீமும், கௌரவ அதிதிகளாக பாராளுமன்ற உறுப்பினர் மனோ கனேசன், நூலின் முதற்பிரதியை எக்ஸ்பிரஸ் நியுஸ் பத்திரிகை நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் திரு. குமார் நடேசன், பெற்றுக் கொண்டார்.

தலைமையுரை லண்டன் சட்டத்தரணியும் மற்றும் பீ.பீ.சி, அறிவிப்பு தயாரிப்பாளருமான விமல் சொக்கநாதன் நிகழ்த்தினார். சிறப்புரையை பேராசிரியர் வல்லிபுரம் மகேஸ்வரன், நூல் ஆய்வுரை பேராசிரியர் ஸ்ரீ பிரசாந்தன், நூல் விமர்சனத்தை ஊடகத்துறையில் கலாநிதி எம் ரஸ்மின், நிகழ்த்தினார். ஜி.போல் அந்தனி, திருமதி வசந்தி தயாபரன் ஆகியோறும் வாழ்த்துறைகளை நிகழ்த்தினார்கள்.

இந் நிகழ்வில் அரசியல்வாதிகள், இலங்கை வானொலி தொலைக்காட்சி, விளம்பர அனுசரனையாளர்கள். இளம் ஊடகவியலாளர்கள், என பெருந்திரளனோர்கள் சமுகமளித்து பி.எச்.அப்துல் ஹமீதின் நூலை வரிசையாக பெற்றுக் கொண்டனர். வருகை தந்த 400க்கும் மேற்பட்டோர்கள் நூல்களைப் பெற்றுக் கொண்ட சிறப்பம்சமாகும். அத்துடன் சகல நூல்களின் பி.எச். அப்துல் ஹமீட் தனது கையெழுத்திட்டு வழங்கியமையும் விசேட அம்சமாகும்.

பி.எச்.அப்துல் ஹமீத் பற்றி அங்கு உரையாற்றியவர்கள் பொதுவாகக் கூறியவை.....

ஹமீதின் குரலில் ஒரு கனிவு, காந்தம் .கம்பீரம் அதை வைத்துக் கொண்டு அவர் தமிழ் பேசும் 8 கோடி மக்களையும் ஒட்டுமொத்தமாகக் கட்டிப் போடும் வல்லமையை பெற்றுள்ளார். . பி.எச். என்பது வெரும் ஒரு சொல்லல்ல அவருடைய சொற்சித்திர விளையாட்டுகளுக்கெல்லாம் இசைந்து கொடுக்கும் ஓர் மந்திரச்சொல். அவர் பெற்ற வரங்கள் வாழ்த்துக் கொண்டிருக்கும் சொத்துக்கள். இந்த நூல் வானொலி பற்றி அறிந்து கொள்ளக்கூடிய அத்துறை சார்ந்தவர்களுக்கு ஒரு கட்டாய பதிவாகும். அவரது வானொலி வாழ்க்கை , உலக நாடுகளில் அவர் கண்ட அனுபவங்களை பதிவிட்டுள்ளார் இந் நூலில் தனக்கு தமிழைக் கற்றுத் தந்த ஆசான்களை நினைவு கூறுகின்றார். அத்துடன் தனது தாய்க்கும் மனைவிக்கும் இந்த நூலை சமர்ப்பித்துள்ளார். ஏற்கனவே லண்டன், கனடா இந்தியா அமேரிக்கா ஆகிய நாடுகளில் இந் நூலை அறிமுகம் செய்து இலங்கையில் நேற்று 03.06.2023 கொழும்பில் அறிமுக விழாவினை மிக நேர்த்தியாக ஓர் வானொலி கலைஞர் அமைப்பு ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சிறுவர் மலர் காலத்திலிருந்தே கணக்கிட்டால் ஆறு தசாப்த கலாமாக தலைமுறை மாற்றங்களை வியக்கத்தக்க மாற்றங்களைச் சந்தித்து அனுபவப் பதிவுகள் இந்நூலில் அடக்கப் பெற்றுள்ளன. நடிப்புத்துறை, பாட்டுக்கு பாட்டு, இசையும் கதையும், பொதுஅறிவுப்போட்டி, நடிகர் திலகமே விரும்பிக் கேட்ட நாடகங்கள் என்று சிறந்த பல நிகழ்ச்சிகளை வழங்கிக் கொண்டிருந்தார். பாட்டுக்கு பாட்டு அவரை தமிழ்த் தொலைக்காட்சியில் அறிமுகப்படுத்தி சன் .டி.வி, கலைஞர் டி.வி, ராஜ் டீ.வி, ஜெயார டி.வி எனக் கடந்த மூன்று தசாப்தங்களாக இவரது புகழ் உலகெங்கும் பரவ இந்தியத் தொலைக்காட்சிகளில் இவர் நடத்திய பல்வேறு நிகழ்ச்சிகள் காரணமாக இருந்தன. தெனாலி படப்பிடிப்பில்போது நட்பு முறையில் யாழ்ப்பான பேசும் மொழி உச்சரிப்பை சரிபார்த்து அவற்றில் சில நிமிடம் திரையில் வந்து போனார்.தமிழ் பொப் இசைப் பாடல்கள் நிகழ்ச்சியை அறிமுகப்படுத்தினார். நடிகர் திலகம் சிவஜிகனேசன், கமலகசன், எஸ.பி. பாலசுட்ரமனியன், ஜெமினிகனேசன், போன்ற பல்வேறு இசை,பாடகர்கள், நடிகர்களையெல்லாம் இனைந்து அவர்களையெல்லாம் வானொலி போட்டி நிகழ்ச்சிகளை நடாத்தியுள்ளார்.

# சேனையூர் ஸ்ரீ நாகம்மாள் ஆலய வருடாந்த வைகாசிப் பொங்கல் பெருவிழா..!





**( அ . அச்சுதன் )**

கிழக்கில் வரலாற்றுச் சிறப்பு மிக்க கட்டைபறிச்சான் வடக்குப்பகுதியில் அமைந்த சேனையூர் ஸ்ரீ நாகம்மாள் ஆலயத்தின் வருடாந்த வைகாசிப் பொங்கல் பெருவிழா (04-06-2023) ஞாயிற்றுக்கிழமை முழுநிலவை முன்னிறுத்தி வரும் கேட்டை நட்சத்திரமும் கடக லக்கினமும் கூடிய காலை 8.00 மணி 53 நிமிட சுபவேளையில் சேனையூர் ஸ்ரீ வருணகுல விநாயகர் ஆலயத்திலிருந்து பாரம்பரிய முறைப்படி மடைப்பெட்டி ஊர்வலம் நாகம்மாள் ஆலயத்தினைச் சென்றடைந்து பக்தி பூர்வமான கிரியையோடு மடைப்பெட்டி வளர்ந்து ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ அ . அரசரெத்தினம் அவர்களினால் கையேற்கப்பட்டு பொங்கல் பெருவிழா ஆரம்பமானது

இவ் ஆலயம் 120 வருடங்களுக்கு முற்பட்ட பழமையான ஆலயமாகும்.

வேளை நூல் கட்டுதல், பொங்கல் சாடி வைத்தல், பால் பழப்பூசை,சிவலிங்க நாகதம்பிரானுக்கு புனித மஞ்சள் நீர்வார்க்கும் நிகழ்வும் நடைபெற்றது.

நிறைவாக மாலை 3.00 மணிக்கு விஷேட தீ பாராதனைகளுடன் பூசை இடம்பெற்று, ஸ்ரீமகாவிஷ்ணு ஆறுமுக வேல் சகிதம் அம்பாள் திருஉலாவந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பாள்.

அடியார்களின் நலன் கருதி பேரூந்து வசதி மூதூரில் இருந்து நாகம்மாள் ஆலயம் வரை ஒழுங்கு செய்யப்பட்டன. மேலும் வழமை போல் ஆலயத்தில் இவ்வருடமும் அன்னதானமும் வழங்கப்பட்டன.

# அம்பலத்தடி பிள்ளையாரின் பிரமோற்சவ பெருவிழா!



**(வி.ரி. சகாதேவராஜா)**

கல்முனையை அடுத்துள்ள நற்பிட்டிமுனை ஸ்ரீ அம்பலத்தடி விநாயகர் ஆலய வருடாந்த பிரமோற்சவ திருவிழா எதிர்வரும் 17ஆம் தேதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது .

பத்து நாட்கள் திருவிழாக்கள் இடம் பெற்று 26 ஆம் தேதி தீர்த்தோற்சவத்துடன் திருவிழா நிறைவு பெறும்.

25 ஆம் தேதி விநாயகப்பெருமான் முத்துச் சப்பரத்தில் எழுந்தருளி அருள் பாலிக்கவிருக்கிறார் என்று ஆலய தனாதிகாரி எஸ்.இலங்கநாதன் தெரிவித்தார்.



# ஆயிரம் வேல் தாங்கிய பக்தர்களுடன் மாபெரும் கதிர்காம வேல்யாத்திரை!

## சித்தர்கள் குரல் சங்கர் ஜி ஏற்பாடு.

1,000 வேல்களுடன், 1000 முருக பக்தர்கள் கதிர்காமம் நோக்கி பயணிக்கும் மாபெரும் வேல் யாத்திரை சித்தர்கள் குரல் அமைப்பினரால் இவ்வருடத்தில் முதன் முறையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 14ஆம் திகதி உகந்தை மலை முருகன் ஆலயத்தில் இருந்து இவ் ஆறு நாட்கள் வேல் யாத்திரை ஆரம்பமாகின்றது.

திருமூலர் பெருமானின் அருளாசியுடன், சித்தர்களின் குரல் சிவசங்கர் குருஜியின் நேரடி வழிகாட்டலின் கீழ் இவ்வருடத்தில் இருந்து 1,000 வேல்களுடன், 1000 முருக பக்தர்கள் பயணிக்கும் மாபெரும் வேல் யாத்திரையாக, கதிர்காமம் நோக்கி கந்தனை தரிசிக்க வேலோடு மலையில் இருந்து ??பாத யாத்திரை?? தொடங்குகிறது.

இந்த மாபெரும் வேல் யாத்திரையை வேலோடுமலை முருகன் ஆலயத்தின் ஆதீனகர்த்தா முருகஸ்ரீ தியாகராஜா ஆசிரியர் வேல்சாமியாக இருந்து இவ்வருடம் முதல் யாத்திரையை தலைமையேற்று நடத்துகிறார்.

அதற்குரிய சம்பிரதாய வழிபாடுகள் அனைத்தும் சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி தலைமையில் கடந்த சனிக்கிழமை பௌர்ணமி தினம் வேலோடுமலை முருகன் ஆலயத்தில் நடைபெற்றது.

சித்தர்களின் குரல் யாத்திரையின் வேல் சாமியாக முருக பெருமான் சந்நிதியின் வேலை வேல்சாமி தியாகராஜா பெற்றுக்கொண்டார்

வருகின்ற ஜூன் 12ம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு வேலோடுமலையில் அனைத்து பூஜை நிகழ்வுகளும் நடைபெற்று 13ம் திகதி வியாழக்கிழமை பஸ் மூலம் உகந்தை மலைநோக்கிய பயணம் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 14ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு உகந்தை மலையில் இருந்து பாத யாத்திரை ஆரம்பித்து 19ம் திகதி திங்கட்கிழமை நண்பகல் கதிர்காமத்தை சென்றடையும்.

அனைத்து நாட்களும் யாத்திரீகர்கள் அனைவருக்கும் மூன்று வேளை சாத்வீக உணவும், இரண்டு வேளை தேனீரும் இலவசமாக வழங்கப்பட இருக்கிறது.

அனைத்து ஏற்பாடுகளையும் சித்தர்களின் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன், துணைத்தலைவர் மனோகரன் ஆகியோரின் நேரடி ஏற்பாட்டின் கீழ் நடைபெறுகிறது.

விபரம்.

இவ்வருட கதிர்காம பாதயாத்திரை முருக பெருமானின் பேரருளினால் வருகின்ற ஜூன் மாதம் 14ம் திகதி உகந்தை மலையில் இருந்து காட்டு பாதை வழியாக பயணிக்கிறது.

★(13) - உகந்தை மலை★
★(14) - வண்ணாத்தி வெட்டை★
★(15) - குமுக்கன் ஆறு★
★(16) - நாவலடி★
★(17) - யால ஆற்றங்கரை★
★(18) - வள்ளியாத்து பாலம்★
★(19) - வீரச்சோலை ஊடாக கதிர்காமத்தை அடைவர்.★

அனைத்து நாட்களும் சித்தர்களின் குரல் சமஸ்தான நளபாக சக்கரவத்தி மதி அண்ணாவின் கை வண்ணத்தில் மூன்று வேளையும் சாத்வீக உணவும், இரண்டு வேளையும் வழங்கப்பட இருக்கிறது.

தினமும் ஒவ்வொரு இடங்களிலும்,
★(01) சக்தி வாய்ந்த வேல் பூஜை,★
★(02) அபூர்வ வன மூலிகைகளினால் சர்வ வல்லமை வாய்ந்த 210 சித்தர்கள் வேள்வி,★
★(03) வன பூஜை, வன போஜனம்★
★(04) மூலிகை குளியல்,★
★(05) ஒரு கோடி சண்முக பஞ்சாட்சர ஜெபம்,★
★(06) கூட்டு வழிபாடுகள், நமது கர்ம வினைகளை கரைக்கும் அற்புதமான தியானங்கள், திருப்புகழ் பாராயணங்கள் இடம் பெறும்.

**மேலதிக தகவல்களுக்கு:-**
**★தலைவர் - ஆதித்தன் (+94 77 313 8048)★**
**★துணைதலைவர் - மனோகரன் (+94 77 119 2223)★**
**★ஆலோசகர் - மகேஸ்வரன் சுவாமிகள் (+94 77 639 2368)★**

**விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா**
**காரைதீவு நிருபர்**



# வன்முறை தீவிரவாதத்திற்கு எதிராக மாணவர்களின் மீளெழும் சக்தியை கட்டியெழுப்பும் செயற்திட்ட நிறைவுவிழா!







**( வி.ரி.சகாதேவராஜா)**

அம்பாறை மாவட்டத்தில் வன்முறை தீவிரவாதத்திற்கு எதிராக மாணவர்களின் மீளெழும் சக்தியை கட்டியெழுப்பும் நோக்கில் செயற்படுத்தப்பட்டு வந்து EMPOWER செயற்திட்டத்தின் இறுதி நிகழ்வு நேற்று முன்தினம் சம்மாந்துறையில் நடைபெற்றது.

மூவின மாணவர்களின் திறமையை வெளிக்கொண்டுவரும் கலை நிகழ்ச்சி மற்றும் திட்ட முடிவு நிகழ்வும்

சுவாட் நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் க.பிறேமலதன் தலைமையில் சம்மாந்துறை அப்துல் மஜீத் மண்டபத்தில் பிரமாண்டமான முறையில் நடாத்தப்பட்டது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதிகளாக சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர் யூ.எல்.அஸ்லம் , சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளரும் சிரேஸ்ட ஊடகவியலாளருமான தவி.ரி.சகாதேவராஜா சம்மாந்துறை கோட்டக்க்கல்விப் பணிப்பாளர் எம்.ரி.எம்.ஜனுபர் , அரசசார்பற்ற அமைப்புக்களின் இணைப்பாளர் யூ.எல்.இர்வான் நாவிதன்வெளி அன்னமலை தேசிய பாடசாலையின் அதிபர் திருமதி.நிலந்தினி ரவிச்சந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பித்தார்கள்.

SWOAD நிறுவனமானது GCERF மற்றும் HELVETAS நிறுவனத்தின் நிதி உதவியுடன் அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில், சம்மாந்துறை, உகன ஆகிய கல்வி வலயத்திற்குட்பட்ட 12 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு அப்பாடசாலையில் கல்வி பயிலுகின்ற 15தொடக்கம் 17வயதுக்கு உட்பட்ட மாணவர்களை இலக்குக்குழுக்களாகக் கொண்டு வன்முறை தீவிரவாதத்திற்கு எதிராக மாணவர்களின் மீளெழும் சக்தியை கட்டியெழுப்பி அவர்களிடையே நல்லிணக்கத்தினை ஏற்படுத்தும் முகமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த செயற்திட்டம் நிறைவுற்றது.

இந்நிகழ்வுகளில் மூவின மாணவர்களின் திறமைகளை வெளிக் கொண்டுவரும் நோக்கில் சமாதானம் மற்றும் நல்லிணக்கம் போன்ற தொனிப் பொருளில் பல கலைநிகழ்ச்சிகள் மாணவர்களினால் நடாத்தப்பட்டது. EMPOWER செயற்திட்டத்தின் ஊடாக அடைந்து கொண்ட பெறுபேறுகள் மற்றும் அனுபவங்கள், கற்றுக் கொண்ட பாடங்கள் போன்ற விடயங்களை பேச்சு, கவிதை, நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகளின் ஊடாக மாணவர்களினால் அரங்கேற்றப்பட்டது.

# மருதமுனை 65மீற்றர் வீட்டுத் திட்டத்தில் தெருவிளக்கு பொருத்தும் வேலைத்திட்டம் ஆரம்பம்





**(சர்ஜுன் லாபீர்)**

அண்மையில் மக்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்ட மருதமுனை சுனாமி வீட்டுத்திட்டத்தில் உள்ள உள்ளக தெருக்களுக்கான மின் விளக்குகளை பொருத்தும் வேலைத்திட்டம்(05) மருதமுனை சுனாமி வீட்டுத் திட்டத்தில் இடம்பெற்றது.

கல்முனை மாநகர சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம் அஸ்மி,கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி,கல்முனை மாநகர பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம் அஸீம்,பொறியியலாளர் ஏ.ஜ.ஜெளஸி தொழில்நுட்ப உத்தியோகத்தர் எம்.அமீர் உடபட பலரும் கலந்து கொண்டனர்.

இவ் வீட்டுத்திட்டத்தில் ஏற்கனவே தனித் தனி வீடுகளுக்கான மின்சாரம் வழங்கப்பட்ட நிலையில் தெருக்குகளில் உள்ள மின் விளக்குகள் இதுவரை காலமும் இல்லாமையினால் மக்கள் மிகுந்த சிரமங்களுக்கும்,கஸ்டங்களுக்கும் உட்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# பாக்கிஸ்தான் உயர் கல்வி ஆணையம் அல்லமா இக்பால் புலமைப்பரிசில் தேர்வுப் பரீட்சை



**(அஷ்ரப் ஏ சமத்)**

பாகிஸ்தான் உயர்கல்வி ஆணையம், அல்லாமா இக்பால் புலமைப்பரிசில் திட்டத்திற்கான தேர்வுப் பரீட்சையினை மே மாதம் 29ம் திகதி முதல் ஜுன் 4 வரை இலங்கையில் நடத்தியது. புத்தளம், மட்டக்களப்பு, கண்டி, மாத்தறை மற்றும் கொழும்பு ஆகிய இடங்களில் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. நாடளாவிய ரீதியில் இருந்து மாணவர்கள் இத்தேர்வில் கலந்துகொண்டனர். பல்வேறு இனங்களை சேர்ந்த மாணவர்கள் தேர்வில் பங்கேற்றது குறிப்பிடத்தக்க விடயமாகும். இத்தேர்வின் முடிவுகள் ஆகஸ்ட் மாதம் அறிவிக்கப்படும். மேலும், தெரிவு செய்யப்பட மாணவர்களுக்கான புலமைப்பரிசில் உயர் கல்வி ஆணையத்தின் தலைவரினால் வழங்கப்படும். பாடங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களைப் பொறுத்து, கல்வி நடவடிக்கைகள் இவ்வருட ஒக்டோபர் முதல் ஆரம்பிக்கப்படும். கொழும்பிலுள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறது

# போலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பாவனையிலிருந்து விடுபடுவதற்கான வழிகாட்டலை வழங்கும் சுற்றாடல் தின விழிப்புணர்வு ஊர்வலம்!!





**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு

பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பாவனையிலிருந்து விடுபடுவதற்கான வழிகாட்டலை வழங்கும் சுற்றாடல் தின விழிப்புணர்வு மற்றும் ஊர்வலம் (05) திகதி மட்டக்களப்பில் இடம்பெற்றது.

மத்திய சுற்றாடல் அதிகார சபை, மண்முனை வடக்கு பிரதேச செயலகம், மட்டக்களப்பு மாநகர சபை ஆகியன இணைந்து Child fund மற்றும் AU Lanka ஆகியவற்றின் ஒத்துழைப்பு மற்றும் நிதி அனுசரனையில் குறித்த விழிப்புணர்வு நிகழ்வு மட்டக்களப்பு கோட்டைப் பூங்காவில் இடம்பெற்று அங்கிருந்து மட்டக்களப்பு மணிக்கூட்டுக்கோபுரம் வரை விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது.

'பிளாஸ்டிக் மூலம் ஏற்படக்கூடிய மாசினை தடுப்போம்' எனும் தொனிப் பொருளில் AU Lanka நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் க.கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த விழிப்புணர்வு நிகழ்விற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.கலாமதி பத்மராஜா அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்ததுடன், சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு சிறைச்சாலையின் அத்தியட்சகர் நல்லையா பிரபாகரன், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உதவிப்பணிப்பாளர், Child Fund நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளர் விஜயபால சின்னத்தம்பி, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.சசிகலா புண்ணியமூர்த்தி, 231 வது இராணுவ படைப்பிரிவின் உயரதிகாரிகள், மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் கிராம உத்தியோகத்தர்களுக்கு பொறுப்பான நிருவாக உத்தியோகத்தர் கே.ராஜன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்ததுடன், 'இயற்கையை நாம் நேசிப்போம் - இயற்கை எம்மை நேசிக்கும்' எனும் வகையிலான ஆலோசனையினை அதிதிகள் தமது உரையினூடாக வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது விழிப்புணர்வு ஊர்வலம் முன்னெடுக்கப்பட்டதுடன், நான்கு குழுக்களாக பிரிந்து கோட்டை பூங்கா, கல்லடி கடற்கரை, லேடி மெனிங் வீதி மற்றும் காந்தி பூங்காவை அண்மித்த பகுதிகளில் காணப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை சேகரிக்கும் நடவடிக்கையினையும் முன்னெடுத்திருந்தனர்.

இந்நிகழ்வுகளில் பிரதேச சுற்றாடல் முன்னோடி பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், மண்முனை மேற்கு - வவுணதீவு இளைஞர் யுவதிகள், இராணுவ தரப்பினர் உள்ளிட்ட இயற்கையை நேசிக்கும் பலரும் இதன்போது கலந்து கொண்டுள்ளனர்.

# திருமலை ரோட்டராக்ட் கழகத்தால் இரண்டு சக்கர நாற்காலிகள் அன்பளிப்பு



திருகோணமலை ரோட்டராக்ட் கழகத்தினர் ஜுன் மாதம் நான்காம் திகதி திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு இரண்டு சக்கர நாற்காலிகளை அன்பளிப்பு செய்தனர். இந்நிகழ்வில் ரோட்டராக்ட் கழகத்தின் தலைவர் அஜந்திக்கா, செயற்திட்ட தலைவர் அபிநயா ரகுராம் ஆகியோருடன்

வைத்தியசாலையின் பணிப்பாளர் Dr. ஜகத் விக்ரமரத்ன அவர்களும் ரோட்டரி கழகத்தின் சார்பில் இலங்கை மத்திய வங்கியின் கிழக்கு மாகாண பிரதேச முகாமையாளர் திரு. க. பிரபாகரன் அவர்களும் இலங்கை வங்கியின் கிழக்கு மாகாண சந்தைப்படுத்தல் அதிகாரி ந. து. ரகுராம் அவர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர். செய்தித்தாள்களில் சக்கர நாற்காலிகள் தேவை குறித்த செய்தியின் அடிப்படையில் இந்த நிகழ்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

## எழுதத் தூண்டும் எண்ணங்கள் : 01

# ஆடம்பரங்களையும் வீண்செலவுகளையும் குறைப்போம்

*பண்பாடு பழக்க வழக்கம் என்று
பண்பட்டு வாழ்ந்த நம் தமிழ் மக்கள்
பண்பாட்டை மறந்து சீர்கெட்டுச் செல்வதைப்
பண்படுத்தும் வகையில் வாழ்வியல் அம்சங்களில்
ஆடம்பரங்களையும் வீண்
செலவுகளையும் குறைப்போம்*

இந்த உலகம் சகல உயிரியங்களுக்கும் எற்றவகையில் சகல வளங்களும் கொண்டதாகப் படைக்கப்பட்டு இருக்கிறது. இந்த உலகத்திலுள்ள சகலமும் நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு ஆகிய பஞ்ச பூதங்களின் சேர்க்கையாகும். இறைவன் இந்த உலகத்தையும் உயிரினங்களையும் படைத்திருக்கிறான் என உலக மதங்கள் ஒப்புக் கொள்கின்றன. இந்து மதம் இறைவன் சகலவற்றிலும் நீர்க்கமற நிறைந்திருக்கிறான் எனக் கூறுகிறது. அதனை வலியுறுத்தும் வகையில் பிரம்ம சூத்திரம் 'நானே பிரமம், நீயே பிரமம், அதுவே பிரமம்' என பிரம்மத்தின் உட்பொருளை வெளிப்படுத்தி நிற்கின்றது.

ஒருவர் பிறக்கும் போது ஏழையாகப் பிறக்கலாம். அவர் இறக்கும் போது ஏழையாக இறப்பது அவரின் பலவீனமாகும். வாழ முயற்சிப்பவனுக்கு இந்த உலகம் வழிவிட்டுக் கொண்டிருக்கும். வாழத் தெரியாதவனுக்கு நரகமாக இருக்கும். இந்த உலகத்தையும் அதற்குள் நமக்குத் தேவையான வளங்களையும் தந்த இறைவன் கருணைக் கடலாகும். உலகைத் திருத்திய உத்தமர்களும், உலகை ஆண்டவர்களும், விஞ்ஞானிகளும் கண்டுபிடிப்பாளர்களும், உலகப் பிரபலங்களும், உலகப் பணக்காரர்களில் பெரும்பாலானோர் சாதாரணமான குடும்பத்தில் இருந்து வந்தவர்களே. அவர்கள் வாழ்க்கையைப் புரிந்து கொண்டு, முயற்சி செய்து, பல தோல்விகளைச் சந்தித்து, பல எதிர்புக்களை எதிர் கொண்டு, தமது இலக்கை நோக்கிப் பயணித்து அதில் வெற்றி கண்டவர்களாவர். அவர்கள் போலியான நம்பிக்கைகள், போலிக் கெளரவம், மூடத்தனம் என்பவற்றில் இருந்து விடுபட்டு வெற்றி எனும் இலக்கை அடைந்தவர்கள்.

இறைவன் பற்றில்லாதவன், ஆசா பாசங்கள் அற்றவன், விருப்பு வெறுப்பு இல்லாதவன், யாவும் கடந்தவன், அருவமானவன், அடியாருக்கு அடியவன், எழியோருக்கு எழியவன் என இந்துமத நூல்கள் கூறுகின்றன. இன்று மதத்தின் பெயரால், இனத்தின் பெயரால் பல பிற்போக்குத் தனங்கள் வேர் விட்டு விருட்சங்களாக வளர்ந்து நிற்கின்றன. இவை பலரை ஆண்டு கொண்டிருக்கின்றன. அது பலரின் மனங்களில் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருக்கின்றன. இதன் செல்வாக்கு கீழைத்தேய நாடுகளின் சமூக, அரசியல், பொருளாதாரம், கலாசாரம் ஆகியவற்றில் பலத்த தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. நீண்டகாலமாக இலங்கையில் மதம், இனம், மொழி என்றவாறு சமூகங்கள் பிளவுபட்டுக் கிடக்கின்றன. மதத்துக்குள்ளே, இனத்துக்குள்ளே, சாதிக்குள்ளே, குலத்துக்குள்ளே, கோத்திரத்துக்குள்ளே, கிராமத்துக்குள்ளே, பிரதேசத்துக்குள்ளே, நாட்டுக்குள்ளே எனப் பல விரிசல்கள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன. இந்தப் விரிசல்கள் எல்லாவற்றுக்கும் அடிப்படைக் காரணமாக அமைந்தவை இனம் மதம், மொழி என்றால் மிகையாகாது.

இறைவன் இனம், மதங்களுக்கிடையே பிளவினை ஏற்படுத்தவில்லை. மனிதன் தம்மை முன்னுரிமைப் படுத்திச் சில ஆச்சாரங்களைத் தோற்றுவித்தான். வேதத்தின் பிரம்ம சூத்திரத்தில் பிராமணர், சத்திரியர், வைசீகர், சூத்தரர் என்ற பிரிப்பும் இனம், சாதி, குலம், கோத்திரம், சாகியம் என்ற உயர்வுச் சிக்கலும் பிற்படுத்தப்பட்டோர் சமூக அமைப்பை உருவாக்கியது. இதுவே காலப் போக்கில் பெருவாழ்வு பெற்றுப் பிரபலமடைந்தது. இன்று பெரும்பாலான பிளவுகள் மதத் தலங்களை மையப்படுத்தியே உருவாகிக் கொண்டிருக்கின்றன. இன்று பெரும்பாலான இந்துக் கோயில்கள் இத்தகைய பிளவுகளின் நிலைக் களங்களாக விளங்குகின்றன. நிர்வாகத் தெரிவுகள், உச்சவ விழாக்கள், பூசை, புனஸ்காரங்கள் ஆகியவற்றில் சிலர் முன்னுரிமைப் படுத்தப்பட்டுச் சிலர் ஒதுக்கப்படுகின்றனர். இதனால் பல கோயில்கள் பிரச்சினைகளின் உறைவிடமாக விளங்குகின்றன. இப்பிரச்சினைகளில் பல கோயில் சமூக மட்டத்தில் தீர்க்கப்படாமல் நீதி மன்றங்களில் நிற்கின்றன. அமைதியின் உறைவிடமாக இருக்க வேண்டிய பல கோயில்கள் வாக்குவாதம், சண்டை, சச்சரவு, அடிதடி, வெட்டுக் கொத்து, கொலை என பிற்போக்குத் தனமான சிந்தனைகளுடனும், மூடநம்பிக்கைகளுடனும் பிரச்சினைகளின் நிலைக் களமாக மாறிக் கொண்டிருக்கின்றன.



சோலையூர்க் குருபரன்



கடவுள் என்ற சொல் நான் உன்னுள் உயிராக இருக்கிறேன் என்பதை உணர்த்துகிறது. இறைவன் நம் உடலில் ஆத்மாவாக இருந்து நம்மை இயக்கிக் கொண்டு இருக்கிறான். 'தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்..' என்பது மூவாயிரம் ஆண்டுகள் சிவனுடன் கலந்திருந்த திருமூலரின் மெய்யான வாக்கு. இதை உணராமல் ஒருவருக்குத் துரோகம் செய்கிறோம். நாம் செய்யும் துரோகம் அந்த உடலில் இருக்கும் இறைவனையும் சென்றடையும் என்பதை மறந்து விடுகிறோம். இவ்வாறுதான் பழி, பாவம் நம்மை வந்தடைகின்றன. ஒருவரிடம் இருக்கும் 'நான்' என்ற ஆணவம் சகலதையும் மறைத்து விடுகின்றன. கர்வம் எனும் மாளை நம்மை வந்தடைந்து உண்மையை மறைத்து மீண்டும் மீண்டும் பாவம் செய்யத் தூண்டுகின்றன. இறைவன் ஒவ்வொருவரின் உடலிலும் உயிராக இருந்து நம் முன்னால் நடமாடிக் கொண்டிருக்கிறான் என்பதை மறந்து இறைவன் சிலையாக இருக்கும் கோயிலுக்குச் சென்று வழிபடுவதும் ஒரு மாயைதானே, அத்தகையவருக்குப் புத்தி எதற்கு எனக் கூடு விட்டுக் கூடுபாய்ந்த, முக்காலமும் உணர்ந்த சித்தர்கள் கேட்கின்றனர்.

நமது இன்றைய நிலைக்கு நாமே காரணம். பிறக்கும்போது ஏழையாகப் பிறந்தவன் இறக்கும் போதும் ஏழையாக இறக்கிறான் என்றால் அதற்கு அவனே காரணம். பிறக்கும்போது அவனை இந்த உலகம் வரவேற்றது. அவனுக்காகச் சகல வளங்களும் கொட்டிக் கிடந்தன. ஊனமின்றித்தான் அவன் பிறந்தான். அவ்வாறு இருக்கையில் இறைவன் முதற் கொண்டு சகலரிடமும் கையேந்தக் கற்றுக் கொண்டான். தனது வல்லமை உணர்ந்து முயற்சி செய்திருந்தால் அவனும் ஒரு செல்வந்தனாக மாறி இருக்கலாம். இன்று நீ நோயாளியாக இருந்தால் அதற்கும் நீயே காரணம். இந்த உடம்பு ஒரு பொக்கிசம் என்பதனை மறந்து கண்டதெல்லாம் சாப்பிட்டுக் குடித்து, உடம்பைக் கெடுத்து நோயாளியாக யார் காரணம். பரீட்சை எழுத வேண்டிய மாணவன் பரீட்கைக்குப் படிக்காமல் பரீட்சை எழுதினால் சித்தி எவ்வாறு கிடைக்கும். ஒரு வியாபாரி வியாபாரத்தில் கவனமின்றி இருந்தால் அவன் எவ்வாறு இலாபத்தைச் சம்பாதிப்பான். ஒரு விவசாயி தனது விவசாயத்தில் முயற்சியின்றி இருந்தால் அவனால் எவ்வாறு சிறந்த விழைச்சலைப் பெற முடியும். இவ்வாறு எல்லாவற்றுக்கும் நாமே காரணமாக இருந்து மற்றவர் மீதும் இறைவன் மீதும் பழியைப் போடுவதில் என்ன பயன் இருக்கிறது. உலகைத் திருத்திய உத்தமர்களும், பெரிய தலைவர்களும், பிரபலமானவர்களும், உலகப் புகழ் பெற்ற கோடீஸ்வரர்களும் தமது தொடர் முயற்சியினால் தொடர் வெற்றி கண்டிருக்கிறார்கள். உலகப் பணக்காரர் வரிசையில் 2023 இல் முதலாம் இடத்தில் இருக்கும் எலான் மஸ்க் சாதாரண ஏழைக் குடும்பத்தில் பிறந்து தொடர் முயற்சியால் இந்த நிலையை அடைந்திருக்கின்றார்.

நமது பலவீனம்தான் இன்னொருவருக்கு வெற்றியாக அமைகின்றது. ஒரு வெற்றியாளன் ஒருவரைத் தோற்கடிக்க வேண்டுமெனில் அவரின் பலவீனத்தைக் கண்டு பிடித்து அதற்கூடாக அவரை வீழ்த்தி வெற்றி கொள்ள முயற்சி செய்கிறான். எந்த ஒரு வெற்றியும் பலவீனத்துக்கூடாகவே கட்டி எழுப்பப்படுகின்றன. ஒருவர் அச்சுறுத்தல், சவால்கள், பிரச்சினைகளுக்கு அஞ்சிக் கொண்டிருந்தால் வாழ்க்கையில் முன்னேற முடியாது. பலருக்குத் தமது பலம் என்ன என்பது அவருக்கே தெரிவதில்லை. அஞ்சி அஞ்சி வாழ்வதையும் விடச் செத்து மடிவதே மேல் என்பார்கள். ஒருவர் வாழ்க்கையில் பலமுறை சறுக்கி விழலாம். அத்தனை தடவையும் பிறர் உதவியின்றித் தானே எழுந்திருப்பவன் வாழ்க்கையில் வெற்றியாளன் ஆகின்றான். நமது வாழ்க்கை நம் கையில்தான் இருக்கின்றன. நமது வாழ்க்கையை இன்னொருவர் தீர்மானிக்க முடியாது. இன்னொருவர் தீர்மானித்தால் அது நமது வாழ்க்கையாக அமையாது. வெற்றியோ தோல்வியோ நாமே முயற்சி செய்ய வேண்டும். தோல்வியைக் கண்டு துவண்டு விடாமலும் வெற்றியைக் கண்டு இறுமாப்புக் கொள்ளாமலும் இரண்மையும் சமனாக மதிக்கின்ற பக்குவம் யாரிடம் வருகிறதோ அவனே எதிர்காலத்தில் தொடர் வெற்றிக்குக் காரணமானவனாக இருப்பான். ஏனெனில் வெற்றியும் தோல்வியும் நிரந்தரமல்ல.




இறைவன் விருப்பு வெறுப்பு அற்றவன் என்பதனால் எவரிடம் இருந்தும் எதையும் விரும்புவதுமில்லை. வெறுப்பதுமில்லை. ஆரிய வேதம், வேதாந்தம், இதிகாசங்கள், ஸ்மிருதிகள், சமஸ்கிருதம் ஆகியன பூசை, புனஸ்காரங்கள், யாகங்கள், பிரதிஸ்டைகள் பற்றிக் கூறுகின்றன. ஆடம்பரங்களும், வீண் செலவுகளும் பற்றிய விடயங்கள் பற்றி எல்லாம் இவைகளே விரிவாகக் கூறுகின்றன. அத்தோடு மாந்திரிக முறைகளும் வீண்செலவுகளுக்கு வழிவகுக்கின்றன. ஆனால் நமது சித்தாந்த சைவம் 'அன்பே சிவம' 'ஆலயமே காயம் அறிவே விவலிங்கம். ஆலயமும் காணா அன்பருக்குச் சீலமொடு.. அன்பே அபிசேகம் அன்பே நற்சிந்தனையுமாம். (திருமந்திரம்) உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பு ஆலயம்

வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்கர்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காணாத மணிவிளக்கு எனத் திருமூலர் திருமந்திரத்தில் முற்றும் உணர்ந்து பாடி இருக்கின்றார். சைவ சித்தாந்த நூல்கள் இந்த உண்மையைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன. இந்த உண்மையை உணராது இருப்பதற்காகவே மதம் என்பதற்குள் இருக்கின்ற நமது பலவீனத்தை அறிந்து மூடநம்பிக்கைகளை நம்மத்தியில் வளர்த்துக் கொண்டிருக்கின்றனர். மதம் தலைக்கேறி மூடத்தனங்களின் உறைவிடமாகப் பலர் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இதையே மூலதனமாக ஆரிய வேத, சமஸ்கிருதவாதம் நன்கு பயன்படுத்திக் கொள்கிறது. இந்த நடைமுறைகளினால் தினமும் யாகம், பூசை, புனஸ்காரம், பிரதிஸ்டை எனப் பல சொத்துக்கள் நாசமாகியதோடு உயிர்ப் பலிகளும் நடந்து கொண்டிருந்தன. இதில் வெறுப்புற்று இந்து மதத்திலிருந்து வெளியேறி மாவீரர் சமண மதத்தையும், புத்தர் பெளத்த மதத்தையும் தோற்றுவித்தனர். இவ்வாறுதான் பிராமணியத்துக்கு எதிராக வீரசைவமும் உருவானது.

எமது சித்தாந்த சைவம் எளிமையானது. இலகுவானது. செலவு குறைந்தது. இதனை நாம் விரும்புவதில்லை. ஆடம்பரங்கள், வீண் செலவுகளையே விரும்புகின்றோம். எமது நாயன்மார்களில் பலர் அன்பே சிவம் என்பதைத் தமது எளிமையான வாழ்க்கையின் மூலம் உணர்த்தி இருக்கின்றனர். கண்ணப்ப நாயனார், அதிபத்த நாயனார், திருநாளைப் போவார் நாயனார், குங்கிலியக்கலய நாயனார், மனதுள் கோயில் கட்டிய பூசலார் போன்ற பலர் தமது எனிமையான வாழ்க்கையின் மூலம் இறைவனைக் கண்டு பரவசமடைந்து முத்திப்பேறு பெற்றனர். அதேபோல் நந்தனாருடைய வாழ்க்கையையும் கற்றிருக்கிறோம்.

நாரதர் கலகம் வழைவிப்பவர். நாரதரின் கலகம் நன்மையில் முடியும் என்பார்கள். நாரதர் எவ்வேளையும் நாராயணா நாராயணா என உச்சரித்துக் கொண்டு மூவுலகையும் வலம் வருவார். தன்னை விட நாராயணனை அடிக்கடி உச்சரிப்பவர்கள் எவருமில்லை என்ற கர்வத்தில் உண்மையை அறிந்து கொள்வதற்காக கிருஷ்ணரிடம் செல்கின்றார். மாதவா இவ்வுலகில் என்னைவிட உன்னை அடிக்கடி அழைப்பவர் யாரும் உண்டா எனக் கேட்கின்றார். அதற்குக் கிருஷ்ணர் நாரதா தெருக்கோடியில் ஒரு விவசாயி இருக்கிறான் அவனே சிறந்தவன் எனக் கூறுகின்றார். அவனைப் பார்ப்பதற்காகச் சென்று ஒழிந்திருந்து அவதானிக்கின்றார். காலையில் எழும்போது நாராயணா என்றும், தொழிலுக்குப் போகமுன்னரும், இரவுத் தூக்கத்தக்குச் செல்லு முன்னரும் தினமும் மூன்று முறை நாராயணா என அழைத்ததைக் காண்கிறார். அங்கிருந்து நாராயணனிடம் செல்கின்றார். நாராயணா நான் தினமும் பல தடவை உன் பெயரை உச்சரிக்கிறேன். ஆனால் அந்த விவசாயி மூன்று முறைதானே உச்சரிக்கிறான் எனக் கூறி வருத்தமடைகிறார் நாரதர். நாராயணன் நாரதரிடம் ஒரு குவளை நிரம்ப விளக்கெண்ணையை ஊற்றிக் கொடுத்து இது சிந்தாமல் பிரகாரத்தைச் சுற்றிவா எனக் கூறுகின்றார். அதனை எடுத்துக் கொண்டு பிரகாரத்தைச் சுற்றி வருகின்றார் நாரதர். கிருஷ்ணர் நாரதரிடம் பிரகாரத்தைச் சுற்றி வரும்போது எத்தனை தடவை என் நாமத்தை உச்சரித்தாய் எனக் கேட்கின்றார். இது என்ன கேள்வி, எண்ணெய் சிந்தாமல் அவதானத்துடன் இருக்கும் போது, உன்நாமத்தை எவ்வாறு உச்சரிக்க முடியும் என நாரதர் கேட்டதும் கிருஷணர் அந்த விவசாயி வறுமையில் இருந்த போதிலும் காலம் தப்பாமல் மூன்று வேளையும் நெஞ்சில் கைவைத்து மெய் அன்போடு என்நாமத்தை உச்சரிக்கிறான். நீ பிரகாரத்தைச் சுற்றி வரும்போது என்னை மறந்து விட்டாயே. அப்போ விவசாயிதானே உயர்ந்தவன் எனக் கூறியதும் உண்மையை ஒப்புக் கொண்டு வெட்கித் தலை குனிகின்றார் நாரதர். (இராமகிருஷ்ணர் கதைகள்) இக்கதையின் மூலம் பல உண்மைகள் நமக்கு உணர்த்தப்பபடிருக்கின்றன.

ஆகவே, இறைலனைப் பொறுத்தவரை அன்புதான் அடிப்படை என்பது உணர்த்தப்படுகிறது. ஆரிய வேத, சமஸ்கிருத சம்பிரதாயங்களின் ஊடாக நடைபெறும் விழாக்கள், யாகங்கள், பூசைகள், புனைஸ்காரங்கள், பிரதிஸ்டைகளை அல்ல. இவை ஒவ்வொன்றுக்குமாக பல இலட்சங்கள் செலவு செய்யப்படுகின்றன. அண்மையில் பிரசித்தி பெற்ற ஆலயம் ஒன்றில் இருபது நாள் நடைபெற்ற வருடாந்த உற்சவத்தின் முடிவில் பிரதம குரு நெல், அரிசி, தேங்கபய், விலை உயர்ந்த வேட்டி, சால்வை, பட்டுப் பீதாம்பரம், சமித்து வகைகள், ஏனைய பொருட்கள் என்பவற்றை லொறி பிடித்து ஏற்றிச் சென்றிருக்கிறார். அந்த உச்சவத்துக்கு பிரதம குரு, சாதகாசிரியர், இரு உதவிக் குருமார் ஆகியோர் போதுமானது. ஆனால் பிரதம குருவோ தன்னைவட ஆறு குருமாரைக் கொண்டு வந்து அத்தனை பேருக்கும் வேட்டி, சால்வை, தட்சணை என மேலதிக செலவை ஏற்படுத்தி இருக்கின்றார். நாமும் விடயம் தெரியாது அவர்கள் கூறுவதை முற்று முழுதாக நம்பி, ஏன் என்றும் கேள்வி கேட்காமல் செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம். இந்தப் பலவீனத்தைத்தான் ஆரிய வேதமும் குருக்கள்மாரும் தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

நாட்டின் இன்றைய நெருக்கடி நிலை காரணமாகப் பலர் தொழிலை இழந்திருக்கின்றனர். பொருட்களுக்கு மலைபோல் விலை ஏறி மக்களின் நாளாந்த வாழ்க்கைத் தரத்தைப் பாதித்திருக்கின்றன. பலர் ஒரு வேளை, இருவேளை உணவைத் தவிர்த்து, ஊட்டச்சத்தில்லாத உணவை உட்கொண்டு வருகின்றனர். இந்த வேளையில் மக்களிடம் இருந்து பெருமளவு நிதியை எதிர்பார்த்து ஆடம்பரமான விழாக்கள் செய்வதை விடுத்து செலவைக் குறைத்துக் கொள்வது சிறந்தது. அத்தோடு நாட்டின் நிலமை சீராகும்வரை கோயில் கட்டுமானங்கள், கும்பாவிசேகங்கள், பிதிஷ்டைகள் ஆகியவற்றைச் சிறிது காலம் இடை நிறுத்தி வைப்போம். வீணான செலவுகளைக் குறைத்து இருப்பதை வைத்துச் சிக்கனமாகச் செய்து முடிப்போம். மக்களின் சுமையைக் குறைப்போம்.

*எப்படியும் எதுவும் செய்யலாம் என்பதை விடுத்து
இப்படியும் சிக்கனமாகச் செய்யலாம் என்பதை
தக்கபடி உணர்ந்து மக்களின் சுமை குறைக்க
ஏற்றபடி சிந்தித்துச் செயற் படுவோம்.*

சிந்தனை தொடரும்.....

# பொருளாதார நெருக்கடி நிலையால்

# கொழும்பு மத்தி வீதியோர வியாபாரிகளின் அவல நிலை







ஹஸ்பர் ஏ ஹலீம்

கொழும்பில் மிகவும் வண்ணமயமான துடிப்பான காட்சிகளில் ஒன்று பெட்டா சந்தைப் பகுதியின் நிரம்பிய தெருக்கள் ஆகும், அங்குண்;ண ணுகடீணியோரங்களணீது; பழங்கள், பொம்மைகள், ஆடைகள் மற்றும் அழகுசாதனப் பொருட்களை விற்கும் கடைகளாலூ நிரம்பியுள்ளன. இரவும் பகலும், ணஞ்டக்டு;ஹூடிண் அங்கும் இங்கும் கொண்டு செல்கிறார்கள். வாடிக்கையாளர்களால் நிரம்பியிருக்கும் இந்த நெரிசலான தெருக்கள், பார்வையாளர்களுக்கு ஒரு பரபரப்பான வர்த்தகத்தின் தோற்றத்தை அளிக்கிறது. உண்மையில், நிலவும் பொருளாதார நெருக்கடியாலும், அதிகாரிகளிடமிருந்து வரும் துன்புறுத்தல்கள் குறித்தும் தொடர்ந்து கவலையுடன் தாங்கள் முன்னெப்போதும் இல்லாத வகையில் சிரமங்களை எதிர்கொள்வதாக தெருவோர வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். உண்மை நிலையை அறிய கொழும்பின் வீதியோர வியாபாரிகளுடன் ஒரு நாள் செலவிட்டோம்.

'கடந்த காலங்களை போல் அல்லாது வியாபாரம் இப்போதைக்கு ரொம்ப கஷ்டம் இந்த சிறிய பூக்கடையை வைத்தே காலத்தை ஓட்ட வேண்டியுள்ளது இப்போதைய உழைப்பு போதாது கூலி வீட்டில்



மூன்று பாடசாலை செல்லும் பிள்ளைகளை வைத்து கணவனை இழந்த நிலையில் வாழ்ந்து வருகிறேன். அத்தியவசிய பொருட்கள் விலை அதிகம்இகடன் சுமைஇநகை வங்கியில் இது இவ்வாறு இருக்க மின்சார இநீர் கட்டணம் அதிகரிப்பு போன்றன எம்மை வாட்டி வதைக்கிறது பூ மாலை ஒன்று 200 ரூபா விற்கிறேன் ஆனால் 150 ரூபா சொன்னாலும் கூட வாங்குவார் இல்லை' என கொழும்பு மத்திய பகுதியின் பூக்கடை வியாபாரத்தில் ஈடுபடும் பெண் தலைமை தாங்கும் பெண்மணியான சர்வேஸ்வரி தெரிவித்தார்.

'இந்த பூ க்கடையில் உள்ள மாலையை பேரந்தில் ஏறி இறங்கி விற்று அதில் வரும் வருமானத்தை கொண்டே வீட்டில் சமைப்பதற்கு தேவையான



பொருட்களை வாங்க முடியும் ஆனால் தற்காலத்தில் வருமானம் போதாது வியாபாரமும் குறைவு ' என சிறிய பூக்கடை கார வயோதிபர் கிருஷ்ணா தெரிவித்தார்.

'கடுமையான வெயிலில் இந்த வியாபாரத்தை செய்து வருகிறேன் இரண்டு பிள்ளைகள் உள்ளார்கள் கடன் வாங்கியே இந்த பழக் கடை வியாபாரத்தை செய்து வந்தாலும் சரியான நஷ்டம் ஏற்பட்டுள்ளதுடன்

வியாபாரம் குறைவு ரொம்ப கவலையுடன் வாழ்வாதாரத்தை மேற்கொண்டு வருகிறேன் எனது மனைவி வீட்டு பணிப்பெண்ணாகவே உள்ளார்' என அப்பில், ஒரேன்ஜ் வீதியோர பழக்கடை வியாபாரியான இதயராஜா தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார். குறித்த வியாபாரியிடம் இலாப செலவு விபரத்தை அறிய முற்பட்ட போதும் அதனை அவர் மறுத்திருந்தார்.

'சாமான் பொருட்களின் விலை அதிகம் இப்போதைக்கு எனக்கு ஒரு நாளைக்கு 1500 ரூபாவே வருமானம் குடும்பத்தில் மொத்தமாக 05 நபர்கள் உள்ளோம் இது வயிற்றுப் பசிக்கு போதாது விரும்பிய பொருட்களையோ எதுவுமே வாங்க முடியாது. கடும் வெயிலில் வியாபாரத்தை நடாத்திச் செல்கிறோம்' என சிறிய வகை விளையாட்டு பொருட்கள் செய்யும் வியாபாரியான ரகுமானீ; தனது வீதியோர வியாபார நிலை பற்றியும் பொருளாதார சுமை தொடர்பிலும் வெளிப்படுத்தினார்

கொழும்பு நகர் வியாபார பகுதியின் நிலைமை தொடர்பில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை சிரேஷ்ட பேராசிரியர் கலாநிதி கோ.அமிர்தலிங்கம் அவர்களிடம் வினவிய போது ' பணவீக்கம் 73 %.தூ; ;க்து;ஓ 53% ஷூனூ; ஊடிதீணுடிடுது;ஒண்;ண் மீந்டஒடு; ணஞ்டக்டு;ஹூண்ணீ; ணுண்டிதூ ,ஞீ;ஈடு; ட்டீணீஹூடுடஹூமீணு ஞிண்;ண்ஓ

தற்போது கொள்வனவு வீழ்ச்சி கண்டுள்ளது எரிபொ



ருள் தட்டுப்பாடு பற்றாக்குறை நீங்கினாலும் மக்களின் வருமானம் அதிகரிக்கவில்லை 2019ல் வறுமை ஏற்பட்ட நிலையில் மக்களுடைய வாழ்வாதாரத்தில் அது திருப்திகரமாக அமையவில்லை தற்போதைய முறைசார் துறைகளாக அரசதனியார் துறை காணப்பட்டாலும் முறைசாராதுறையாக இருக்கின்ற அன்றாட வாழ்வாதாரத்தை கொண்டு செல்லும் மக்களுடைய வாழ்க்கையில் விடிவு கிட்டவில்லை புத்தாண்டில் மக்களுடைய பொருட் கொள்வனவு குறைவாகவே உள்ளது கொழும்பு நகர் பகுதி வர்த்தகத்தோடு தொடர்ந்து காணப்படுகிறது இங்கு விவசாயமோ வேறு வகையான நிலமைகளோ இல்லை நிர்மாணத்துறை தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டு சில துறைகள் வழமைக்கு பொருளாதார ரீதியில் திரும்பி வருகின்றன. தொழில் வாய்ப்பில் பிரச்சினை உள்ளபடியால் மக்களுடைய வருமானத்தில் மாற்றமில்லை இதனால் வருமானமட்டல் ரீதியான பிரச்சினை உள்ளது

எப்படித்தான் தங்களது வாழ்வாதாரத்தை முன்னேற்ற நினைத்தாலும் தொடர்ந்தும் இவ்வாறான வீதியோர வர்த்தக முறை மூலமே இலாபமீட்ட முடியும். இதனை நிரந்தரமான தொழிலாக கருதினாலும் கொழும்பு புறக்கோட்டை பகுதியானது 1ம்இ2ம் குறுக்குத் தெரு மற்றும் அதனை அண்டிய பகுதிகள் வீதியோர வியாபாரமாகவும் நடைபாதை வியாபார நிலையமாகவுமே காட்சியளிக்கிறது இந்த வர்த்தக நிலை மாலை சுமாராக 7 மணிக்குப் பிறகு மூடப்படுவதனை அவதானிக்க முடிகிறது . தமிழ் சிங்கள இ நோன்பு பெருநாள் கலை கட்டியபோதும் மக்களிடத்தில் பணமில்லை மக்களிடத்தில் பணம் இருந்தால் தான் விரும்பிய பொருட்களை கொள்வனவு செய்வார்கள் என்பதை நன்கு தெரிந்து கொள்ளக்கூடிய நிலை உள்ளது.

சிறிய ரக அளவிலான பொருள் விற்பனையே இடம் பெற்று வருகின்றன. பழவகைஇ விளையாட்டு பொருட்கள்இ ஆடை அடிகலன்கள் இ உற்பத்தி பொருட்கள் என பல வகையான பொருள் விற்பனை இவ் வீதியோர பகுதியில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

கொழும்பு மத்திய பகுதியானது வர்த்தக ரீதியான தளத்தை கொண்ட ஒரு பகுதியாக அமையப் பெற்றுள்ளது. 'அச்சாறு வியாபாரம் செய்து வருகிறேன்

ஆனாலும் மக்களிடத்தில் காசு இல்லை பொருட்களும் விலை அதிகம் மக்களிடத்தில் காசு இருந்தால் தான் அவர்களும் எங்களிடத்தில் வாங்குவார்கள் இப்போதைக்கு கஷ்டம் வியாபாரம் குறைவு சகல பொருட்களும் செமையான விலை அது மட்டுமன்றி இதனை தொடர்ந்தும் முன்னெடுப்பது என்பது இயலாத நிலையாக உள்ளது அன்றாட வருமான வழி குறைவு இருப்பதை கொண்டு ஓரளவு குடும்ப வாழ்க்கையினை கொண்டு செல்கிறோம் .

வீதியில் வியாபாரம் செய்வதென்பது நிரந்தரமாக செய்ய முடியாது சில வேலை பொலிஸார் தடைவிதிக்கின்றனர் இவ்வாறாக வியாபாரத்தை கொண்டு செல்வது பல இன்னல்களை சந்தித்தே ஆக வேண்டும்' என பல வகையான பழவகைகளை கொண்டு அச்சாறு உற்பத்தி வியாபாரியான இம்தியாஸ் தெரிவித்தார்.

அதிகமான சனநெரிசல் வியாபார நிலைமையில் பல இடர்பாடுகளை கொண்ட பகுதியாக மத்திய பகுதி காணப்பட்டாலும் இவ்வாறான வீதியோர வியாபாரிகளின் நிலமை கவலைக் கிடமே அதிகமான சத்தம் எழுப்பியும் வியாபாரம் செய்யக்கூடிய இடமாக இந்த இடம் மாறியுள்ளது உள்நாட்டு வெளிநாட்டு உற்பத்தி பொருட்களின் சந்தைப்படுத்தல் அதிகமாக இங்கு காணப்பட்டாலும் அதனை சந்தைப்படுத்தக் கூடிய வாய்ப்பு கிட்டுகின்ற போதும் பொருளாதார பின்னடைவு பணவீக்கம் போன்றன விழிம்பு நிலை மக்களை



அது ஏமாற்றியுள்ளது தினக் கூலியாக ஒரு நாளைக்கு 1500இ2000 வரை உழைத்தாலும் அது குடும்ப ஜீவனம் சத்துக்கு தற்கால நிலையில் போதாமையாக உள்ளது.

இது பற்றி கொழும்பு மத்திய பகுதி வியாபாரிகளின் குடும்ப தலைவிகளை சந்தித்து நிலவரம் தொடர்பில் கேட்டறிந்த போது இவ்வாறு தெரிவிக்கின்றனர் ' ஒரு நாளைக்கு 2000 ரூபா உழைத்தால் அது மறு நாளே போதாது மிச்சம் பிடிக்க முடியாது முன்னர் உள்ள காலத்தை விடவும் இப்போதைக்கு வாழ்வது கடினமே பாடசாலை உபகரணங்களை கொள்வனவு செய்வதென்றால் இப்போதைய விலை கடந்த முறையை விடவும் மூன்று மடங்காக அதிகரித்துள்ளது கணவன்மார் உழைத்து வருவதை எங்களால் எப்படி மிச்சம் பிடிப்பது எல்லா பொருட்களும் விலை அதிகமே மின்சாரக் கட்டணம் பல மடங்கு அதிகரிப்பை காட்டுகிறது'

'வியாபாரம் இப்போது குறைவு போதாது இதனால் பாதிக்கப்பட்டுள்ளோம் சில வேலை வீதியோர வியாபாரத்தின் போது பொலிஸார் அகற்றச் சொல்வார்கள் அவர்களது கடமையை அவர் செய்கிறார்கள் என்ன செய்வது சட்டத்துக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டியும் உள்ளது' என வீட்டு உபகரணப் பொருள் வியாபாரியான றம்சீன் தெரிவித்தார்.

அரசியல்வாதிகள் காலத்துக்கு காலம் வாக்குறுதிகளை வழங்கிய போதும் வியாபாரிகள் நடைபாதைகளை வியாபாரத்துக்கு பயன்படுத்துவது தொடர்பில் திட்டவட்டமான சட்டங்கள் எவையும் இல்லை என்பது நடை பாதை வியாபாரிகள் கொண்டுள்ள உண்மையான கரிசனையாகவுள்ளது)

கொழும்பு நகரில் உள்ள வீதியோர வியாபாரிகளுக்கு



என்று கொழும்பு மாநகர சபை விதிகள் எதனையும் விதிக்கவில்லை. அவ்வப்போது தமது வசதிகளுக்கு ஏற்ப சில ஒழுங்குமுறைகளை மாத்திரடு; செய்கின்றனர். வாடகைப் பணமும் பெறுகின்றனர். ஆனால் இது பற்றி கொழும்பு மாநனூர சபை அதிகாரிகளிடம் அதிகாரபூர்வமாக அறியமுடியவில்லை. நடைபாதைகளை வியாபாரத்துக்கு பயன்படுத்துவது தொடர்பில் சம காலத்தில் காணப்படும் ஏதாவது ஒழுங்குவிதிகள் தொடர்பான விபரங்களை கொழும்பு மாநகர சபை அதிகாரிகளிடம் கோரிய போதும், அவ்வாறான தகவல்கள் எவையும் வழங்கப்படவில்லை).

(மக்கள் பரபரப்பாக இயங்கும் வேளைகளில் வாகனங்களுக்கு அல்லது மக்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்துவதற்கு நடைபாதை வியாபாரிகள் அனுமதிக்கப்படுவதில்லை, இதன் காரணமாகவே அவ்வாறான வேளைகளில் நடைபாதை வியாபாரிகள் பொலிசாரினால் அகற்றப்படுகின்றனர். அத்துடன், சில ஆர்ப்பாட்



டங்கள் மற்றும் பல்வேறுபட்ட தொழிற்சங்கங்கள் முன்னெடுக்கும் பேரணிகளின் கருப்பொருட்களில் உள்ள விடயங்கள் நடைபாதை வியாபாரிகளையும் பாதிக்கும் விடயங்களாக உள்ள போதும் அவ்வகையான முன்னெடுப்புகள் நடைபாதை வியாபாரிகளுக்கு மேலதிக பிரச்சினைகளையும் கொண்டு வருகின்றன. இவற்றின் போது ஏற்படுத்தப்படும் வீதித் தடைகள் மற்றும் பாதைகள் மூடப்படுதல் என்பன இவ்வியாபாரிகள் தற்போது மேற்கொள்ளும் சிறிய அளவிலான வியாபாரங்களுக்கும் பாதகமாக மாறுகின்றன).

ஆனால் வீதியோர வியாபரிகள் இது பற்றித் தமது கவலைகளை வெளிப்படுத்தியுள்ளனர். தத்தமது அரசியல் நோக்கில் அரசியல்வாதிகள் அவ்வப்போது இது பற்றிப் பேசினாலும் இதுதான் சட்டம் என்ற ஒரு ஒழுங்குவிதி இல்லை என்று வியாபாரிகள் கூறுகின்றனர். ஏனைய வர்த்தகர்களுக்குச் சங்கம் இருப்பது போன்று தமக்குச் சங்கங்கள் இல்லை எனவும் இவர் கவலை வெளியிட்டனர்.



இடங்களுக்கு நில வாடகை அறவிடும் முறைமை வியாபாரிகள் பயமின்றி தமது வியாபார நடவடிக்கைகளை முன்னெடுக்க வழிவகுக்கும் என்பதால் அவ்வாறான ஒரு முறைமை தமக்கு வசதியானதாக அமையும் என ஒரு வியாபாரி கூறினார்: இலங்கை 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்தது முதல் மத்திய கொழும்பு பிரதேசத்தில் வீதியோர வியாபாரம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. எனினுடு; அடுத்தடுத்த வந்த அரசாங்கங்கள் அவர்களின் வியாபார நடவடிக்கைகளுக்கு இடங்களை ஒதுக்கீடு செய்வதில் எந்தவித கவனத்தையும் செலுத்தவில்லை.)

இவர்கள் குடும்ப வாழ்க்கையில் நாளாந்தம் தங்களது பாடசாலை செல்லும் பிள்ளைகள் உட்பட பல இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர்கள். கடந்த காலங்களை விடவும் தற்போதுள்ள நிலையில் அத்தியவசிய பொருட்களின் விலை அதிகரிப்பு இபொருட்கள்தட்டுப்பாடு போன்றன நிலவுகிறது இது இவ்வாறு இருக்க மழை காலங்களில் வீதியோர வியாபார நடவடிக்கைகளை கொண்டு

08 ஆம் பக்கம் பார்க்க...

# தொலைந்துபோன தமிழ்க் கிராமங்கள்

## அனுராதபுர மாவட்டத்தின் பண்டைய தமிழ்க் கிராமங்கள் பற்றிய ஓர் ஆய்வு; பகுதி I

சில வருடங்களுக்கு முன்பு அனுராதபுர மாவட்டத்தில் சிவ பூமியின் சுவடுகளைத் தேடி ஆய்வொன்றை மேற்கொண்டேன். அப்போது அம்மாவட்டத்தில் உள்ள பல கிராமங்களின் பெயர்கள் தமிழ்ப் பெயர்களின் திரிபு போன்று இருந்தன. இப்பெயர்களை முழுமையாக ஆராய வேண்டும் எனும் ஆர்வம் ஏற்படவே அவை பற்றிய விபரங்களைத் தேடினேன். அதன் பலனாக பல ஆச்சரியமான தகவல்கள் கிடைத்தன.

அனுராதபுர மாவட்டத்தில் பண்டைய காலத்தில் ஏராளமான தமிழ்க் கிராமங்கள் இருந்தன. இக்கிராமங்கள் எல்லாவற்றிலும் கோயில்களும் அமைக்கப்பட்டிருந்தன. காலப்போக்கில் இங்கிருந்த தமிழ் சைவமக்கள் இக்கிராமங்களை விட்டு வேறு இடங்களுக்குக் குடி பெயர்ந்தனர். எஞ்சியிருந்த தமிழ் மக்கள் சிங்கள மக்களுடன் திருமண பந்தங்களை ஏற்படுத்திக் கொண்டு இரண்டறக் கலந்தனர்.

இன்று அவர்களின் சந்ததியினர் சிங்களவர்களாகக் காணப்படுகின்றனர். இந்நிலையில் இங்கிருந்த கோயில்களும் பராமரிப்பின்றி சிதைந்து அழிந்து போயுள்ளன.

தமிழர்கள் வாழ்ந்த சில இடங்களில் சிங்கள பௌத்த மக்கள் குடியேறியதுடன் கோயில்கள் இருந்த இடங்களுக்கு அருகில் பௌத்த விகாரைகளை அமைத்து, இந்துக் கோயில்களில் இருக்கும் தெய்வங்களையும் பய பக்தியுடன் வழிபட்டு வந்தனர்.

இக்கோயில்கள் தேவாலய என அழைக்கப்படுகின்றன. சிங்கள பௌத்த மக்கள் இங்குள்ள இந்து தெய்வங்களை கண தெவியா, கத்தரகம தெவியா, ஈஸ்வர தெவியா, விஷ்ணு தெவியா, காளி மேனியன், பத்தினி மேனியன் என அழைத்து பயபக்தியுடன் வழிபட்டு வருகின்றனர். இவ்வாறு தமிழ்க் கிராமங்கள் அனைத்தும் சிங்களக் கிராமங்களாயின. அதே சமயம் பல கோயில்கள் மண்ணுள் புதையுண்டு போயின. இன்றும் சிங்களப் பெயர் கொண்டு அழைக்கப்படும் தமிழ்க் கிராமங்கள் பல இம்மாவட்டத்தில் இருக்கின்றன.

பொ.ஆ. 16 ஆம் நூற்றாண்டு முதல் இங்கு வந்த போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர் ஆகியோர் தமது கிறிஸ்தவ மதத்தைப் பரப்பும் நோக்குடன் இலங்கையிலி ருந்த நூற்றுக்கணக்கான இந்துக் கோயில்களையும், சில பௌத்த விகாரைகளையும் அழித்தனர்.


யாழ்ப்பாணத்தில் மட்டும் 500 கோயில்களை போர்த்துக்கேயர் அழித்ததாக பாதிரியார் குவைறோஸ் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். யாழ்ப்பாணத்திற்கு வெளியே வடக்கு, கிழக்கு, வடமேற்கு, வடமத்தி ஆகிய பகுதிகளில் மேலும் 300 கோயில்கள் வரை அழிக்கப் பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. இவற்றில் அனுராதபுரம் மாவட்டத்தில் உள்ள கோயில்களும் அடங்குகின்றன.

வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் ஐரோப்பியரால் அழிக்கப்பட்ட கோயில்களில் ஓரிரு கோயில்களைத் தவிர ஏனைய எல்லாக் கோயில்களும் அடையாளம் காணப்பட்டு, ஆங்கிலேயர் காலத்திலும், அதன் பின்பும் மீண்டும் அமைக்கப்பட்டன. அதே சமயம் வடக்கு, கிழக்கிற்கு வெளியே அழிக்கப்பட்ட ஆலயங்கள் மீண்டும் கட்டப்படவில்லை. இதற்குக் காரணம் அங்கு தமிழ் சைவ மக்கள் இல்லாமையே.


அனுராதபுரம் பகுதியில் 1670 ஆம் ஆண்டில் தமிழ் மக்கள் செறிந்து வாழ்ந்தது பற்றி றொபேர்ட் நொக்ஸ் அண ஏடிண்ஞ ணிஞூடி ஞிச்டூ கீனு டீச்ஞ டிணிண ணிஞூ இஞுதூடிணிண எனும் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

அனுராதபுரம் மாவட்டத்தில் தமிழ் மக்கள் வாழ்ந்த இப்படியான பல தமிழ்க் கிராமங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இக் கிராமங்களில் தற்போது சிங்கள மக்களே வாழ்கின்றனர். இக்கிராமங்களின் பெயர்களின் முடிவில் குளம் எனும் சொல் காணப்படுகின்றது. தற்போது இப்பெயர்கள் சற்று சிங்களமயமாகி விட்டன. நொச்சிக் குளம்-நொச்சிக்குளம எனவும், காயன் கொல்லை-காயங் கொல்லேவ எனவும், புளியங்கடவை-புளியங்கடவல எனவும், மருதங்கல்லு-மரதன்கல எனவும் உருமாறியுள்ளது.

எனவே இவற்றை அடையாளம் காணக்கூடியதாக







இருக்கின்றது.

அதேசமயம் முற்றிலும் சிங்களப் பெயர்களாக மாற்றமடைந்த தமிழ்க் கிராமங்களை இன்று அடையாளம் காண முடியாமல் உள்ளது.

உதாரணத்திற்கு புளியங்குளம் எனும் தமிழ்ப்பெயர் சியம்பலா கஸ்வெவ எனவும், விளாங்குளம் எனும் தமிழ்ப் பெயர் திவுள் கஸ்வெவ எனவும் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் இன்றும் தமிழ்க் கிராமங்கள் என அடையாளம் காணக்கூடிய பல கிராமங்கள் அனுராதபுரம் மாவட்டத்தில் காணப்படுகின்றன.

இம்மாவட்டத்தில் மொத்தமாக 21 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உள்ளன. இவற்றில் 694 கிராம சேவகர் பிரிவுகளும், 3085 கிராமங்களும் அடங்குகின்றன.

இக்கிராமங்களில் 446 தமிழ்க் கிராமங்கள் அடையாளம் கண்டேன். பல நாட்கள் ஆராய்ந்து, மிகுந்த முயற்சி எடுத்து இவற்றின் தமிழ்ப் பெயர்களைக் கண்டறிந்தேன். இது மிகக்குறைந்த தொகையே.

ஏனெனில் அடையாளம் காண முடியாத வகையில் பல தமிழ்க் கிராமங்கள் உள்ளன.

அடையாளம் காணப்பட்ட 446 தமிழ்க் கிராமங்களின் பெயர்களை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் படி வரிசைப் படுத்தினேன். அவையாவன.

### மிகுந்தலை உதவி அரசாங்க அதிபர் பிரிவு- 53 கிராமங்கள்

வேலன்குளம், கட்டமான்குளம், கல்மடு, சின்ன சிப்பிக்குளம், பனிச்சகல்லு, புதுக்குளம், சுருக்குளம், பெரியகேம் பிக்குளம், வெறுப்பன்குளம், மாங்குளம், முந்திரிப்பூக்குளம், நொச்சிக் குளம், கம்மல் குளம், கன்னாதிட்டி, பிராமண கோட்டை, இட்டிக்கட்டு, காசிமடு, கட்டம்புகாமம், கைப்பிட்டி, வேம்புக்குளம், குஞ்சிக்குளம், குருந்தன்குளம், மன்னயம் குளம், சிறுக்குளம், கூளன்குளம், முதலிப்பன்குளம், சங்கிலிக்குளம், அளப்பன்குளம், கல்குளம், கரடிக்குளம், மருதன்குளம், மருதன்கல்லு, சின்னக்குளம், சாய்ப்புக்கல்லு, சின்னமருதங்குளம், மரதன்குளம், பூவரசங்குளம், புதுக்குளம், நல்லபாம்புக் குளம், குருந்தன் குளம் (மிகுந்தலை), மேல் கரம்பன்குளம், கீழ் கரம்பன்குளம், காயங்குளம், கொட்டமான் குளம், குறிஞ்சரான் குளம், பொத்தானை, இலுப்பைக் கன்னியா, சீப்புக் குளம், சங்கிலிக்குளம் (மிகுந்தலை), உக்குலன் குளம், காட்டுக்குளி, வெள்ளமொறானை, வேள்ளாளர் காமம்

### நுவரகம் பலாத்த மத்தி-உதவி அரசாங்க அதிபர் பிரிவு - 60 கிராமங்கள்.

பசவக்குளம், சின்னப்பன்குழி, கட்டைக்காடு, ஆலங்கட்டு, பெரியசேனை, ஒட்டுப்பள்ளம், கல்பாலம், சமுளங்குளம், ஆலங்குளம், எட்டிக்குளம், புளியங்குளம் (ஆசிரிகம), சம்புக்குளம், பண்டார புளியங்குளம், புளியங்குளம், கொக்குச்சி, பிஞ்சுக்குளம், வீரன்குழி, கருக்கன்குளம், அத்திக்குளம் (கம்பிரிகஸ்வெவ), கல்குளம், இத்திக்குளம், படருக்குளம், கல்குளம் (ஹெலம்பகஸ்வெவ), குளுமாட்டுக்கடை, நொச்சிக்குளம், பாண்டிக்குளம், புதுக்குளம், வேம்புக்குளம், அத்திக்குளம், ஆலங்குளம், கரம்பை, கரம்பைக்குளம், மகா புலங்குளம், மேல்ஓயாமடு, மேல்அத்திக்குளம், மேல் புளியங்குளம், நீராவி, ஈச்சங்குளம், பெரியபங்குழி, பெருமியன் குளம், இலுப்புக்குளம், நெல்லிக்குளம், புசியன்குளம், கோப்பாகுளம், தனயன்குளம், ஆண்டியாகுளம், தெப்பன் குளம், இலுப்பன் கடவை, உலுக்குளம், புலங்குளம், கள்ளஞ்சி, திரப்பனை, மேல்புலங்குளம், நெலுங்குளம், பாண்டித்தன்குளம், பண்டத்தான்குளம், புஞ்சிக்குளம், தட்டான் குளம், சமுளங்குளம், மதுவாச்சி.


### கல்னேவ உதவி அரசாங்க அதிபர் பிரிவு- 9 கிராமங்கள்.

கள்ளன்குடி, கள்ளஞ்சி, கட்டருகாமம், கருவேலமரக் குளம், சின்ன ஒத்தப்பாகம், பெரிய ஒத்தப்பாகம், நாககாமம், பத்தினிகாமம், வெறுங்குளம்.

### ஹொரவபொத்தான உதவி அரசாங்க அதிபர் பிரிவு - 14 கிராமங்கள்.

ஆனைவிழுந்தான், தமிழர்குளம், உறவுப்பொத்தானை, சின்னப் புளியங்குளம், அங்குநொச்சி, முக்குவர் குளம், காயன் கொல்லை, பறங்கியர்வாடி, புளியங்கடவை, ரத்தமலை, மூக்களன்சேனை, வீரச்சோலை, மதுவாச்சி, வேலன்கல்லு.

**(மிகுதி தொடரும்)**



**என்.கே.எஸ்.திருச்செல்வம்**

**வரலாற்று ஆய்வாளர்**

**தமிழரின் வரலாற்றை அறிய அனைவரும் பகிர்ந்துகொள்ளுங்கள்**

**முகப்புத்தகத்திலிருந்து**

---

# பொருளாதார நெருக்கடி நிலையால்

# கொழும்பு மத்தி வீதியோர வியாபாரிகளின் அவல நிலை

செல்ல முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாக்கப்படுவதுடன் நாட்டில் ஏற்பட்ட ஸ்திரத் தன்மை காரணமாக அரசாங்கத்து எதிரான வீதிமறியல் போராட்டங்கள் கொழும்பு நகரில் பல தொழிற் சங்கங்கள்இஅமைப்புக்கள்இ பல்கலைக்கழக மாணவர்கள் என போராட்டங்களை நடாத்துகின்றனர் இதனால் கொழும்பு மத்திய பகுதிக்கு செல்ல முடியாத நிலையில் வீதியோர வியாபார பொருட் கொள்வனவு நடவடிக்கைகள் வீதி தடைகள் மூலமாக பாதிக்கப்படுகின்றன.

பொருளாதார பின்னடைவு மூலமாக நாட்டில் இவ்வாறான நிரந்தர இடமின்றி வீதியோர வியாபாரிகள் கடும் மழை வெயில் என பாராது வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் தாமும் தங்களது பிள்ளைகளும் வாழ வேண்டும் என்பதற்காக இவ்வாறு தங்களை தாங்களே பொருளாதார சுமையில் மாய்த்துக் கொள்கின்றனர்கள்.

இவ்வாறான விடயங்களுக்கு எதிராக அரசுக்கு எதிராக போராட்டத்தில் இறங்கியுள்ள பல தொழிற்சங்கங்கள்இ பல்கலைக்கழக மாணவர்கள் விலை குறைப்பு போதாதுஇவரி அறவீடுஇ அரச சொத்துக்களை தனியாருக்கு விற்பனை செய்ய முயற்சித்தல் இ பயங்கரவாத தடை சட்டத்துக்கு புதிய எதிர்ப்பு சட்டம் உள்ளிட்ட விடயங்களுக்கு எதிரான போராட்டம் கொழும்பு நகர் பகுதிகளில் தான் இடம் பெறுகின்றன.

நடை பாதை வியாபாரிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு தொடர்பில் அண்மையில் (06.04.2023) கொழும்பு துறை வியாபாரச் சங்கம் மற்றும் நடை பாதை வியாபாரிகள் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் சந்திப்பொன்று இடம் பெற்றது. தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க இதன் போது உறுதியளித்தார்.இதன் போது வியாபாரிகளுக்கான அடையாள அட்டை விநியோகிப்பது பற்றியும் ஆராயப்பட்டது.( இவ்வமைப்பு பெரிய கடைகளை நடத்துவோரை பிரதிநிதித்துவம் செய்கின்றது)

பொருளாதார நெருக்கடி மக்கள் மத்தியில் பல பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது சாதாரண கூலித் தொழிலாளி முதல் நடுத்தர வர்க்க மக்களும் இதன் மூலம் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அதிகமான நெருக்கடி உள்ள பகுதியில் வியாபாரம் செய்து வாழ்வாதாரத்தை மேம்படுத்த முயற்சிப்பதும் ஒரு வாழ்க்கைப் போராட்டமாகவே உள்ளது.

சாதாரண குடிமகன் குடும்ப ரீதியாக உணவு தேவைகளை நிவர்த்தி செய்தல்இ பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புதல் மாதாந்த கட்டணங்களை செலுத்துதல்இ கடன் தவனைகளை செலுத்துதல் ஆகிய அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதிலும் இவ் வியாபாரிகள் பல பிரச்சினைகளுக்கு பொருளாதார ரீதியான சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

பொருளாதார நெருக்கடியானது மக்களை வறுமை நிலைக்கு தள்ளியுள்ளது இதனால் கையிருப்பில் பணமின்றி கொள்வனவு சக்தி குறைவடைந்த நிலையில் தொழில் இன்றி பல இளைஞர்கள் காணப்படுகிறார்கள்.

ஏனைய வர்த்தகத் துறையுடன் ஒப்பிடும் போது வீதியோர வியாபாரிகளின் நிலை நாளாந்த நடவடிக்கைகளில் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது எடுத்துக்காட்டாக கொரோனா நோய் தாக்கம் காரணமாக பல பின்னடைவுகளை சந்தித்த இவர்கள் தற்காலத்தில் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

ஏனைய துறைகளைப் போன்று முன்னேறுவது கடினம் .இருந்த போதிலும் இவர்களுடைய நிலையை விரிவுபடுத்தவும் வருமானத்தை அதிகரிக்கவும் அரசாங்கம் புதிய திட்டமொன்றை வகுக்க வேண்டும். வீதி யோர தடைகள் சில நேரம் கொழும்பு மத்திய பகுதியில் பொலிஸாரினால் ஏற்படுத்தப்படுவதுண்டு இதனால் போக்குவரத்து சிரமங்கள் காரணமாக வர்த்தக நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன.

போக்குவரத்து பொலிஸார் வீதியோரங்களில் விற்பனை செய்யும் வர்த்தகர்களை சில வேலை அப்புறப்படுத்துமாறும் போக்குவரத்துக்கு இடைஞ்சலின்றி செயற்படுத்துமாறும் கூறுகின்றனர். ஆனாலும் நிரந்தரமான விற்பனை செய்யக் கூடிய இடவசதி போதாமை பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்க டொலரில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது இதனால் வியாபாரத்தை ஆரம்பிப்பதாயின் மூலதனச் செலவானது கடந்த காலங்களை விடவும் தற்போது பல மடங்கு வரை அதிகரித்துள்ளது. பல வியாபாரிகள் வங்கிகளில் கடன் பெற்றிருப்பார்கள் இதனை மீளச் செலுத்த முடியாது அதிகரித்த வட்டி வீதம் போன்றன அவர்களை வாட்டி வதைக்கிறது.அதிகமான பொருட்கள் சுமார் 90 வீதமானவை வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகிறது இதன் மூலம் வரிச் சுமையும் அதிகரித்துள்ளது இதனால் சாதாரண பொருட்களின் விலையும் அதிகரித்துள்ளது.

கொழும்பு நகர் பகுதியில் அதிகளவான வியாபார நடவடிக்கைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் வீதியோரங்களில் விற்பனையில் ஈடுபாடு காட்டி வருகிறார்கள் இரவு பகல் பாராது நாட்டாமை ஊழியர்களும் கூட வண்டிகளில் சுமந்து பொருட்களை ஏற்றி இறக்குகின்றனர் இவ்வாறு இருந்த போதிலும் சகல விதமான கூலிகளும் போக இது போன்ற வியாபாரிகளின் இலாபமீட்டல் குறைவாகவே உள்ளதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

அதிகமான சாதாரண மக்கள் சேரிப்புறங்களிலும் அடுக்கு மாடிகளிலும் வாடகை வீடுகளிலும் வாழ்ந்து வருகிறார்கள். நாள் கூலி தொழிலாளிகளாகவும் முறைசாரா துறை என்ற நிலையில் வியாபார நடவடிக்கைகளிலும் ஈடுபட்டாலும் சுமார் குடும்ப வாழ்வில் பாடசாலை செல்லும் பிள்ளைகள் உட்பட சுகாதார தேவைகளை பூர்த்தி செய்தல் முதல் பொருளாதார கஷ்டங்களை அனுபவித்தே வருகின்றனர்.

இவ்வாறாக ஒட்டு மொத்தமாக இவர்களின் நிலை அறிந்து பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள மாற்று வழி வகைகள் ஊடாக வீதி வியாபாரிகளின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு கிட்டுமா என அவர்கள் அங்கலாய்க்கின்றனர்.

(தானும் தனது கணவரும் தமது பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பில் கொண்டிருந்த கனவுகளை பூக்கடை நடத்தும் சரஸ்வதி என்னுடன் பகிர்ந்து கொண்டார். அவரின் கணவர் 20 வருடங்களாக அந்த பூக்கடையை நடத்தி வந்த நிலையில் சுமார் மூன்று வருடங்களுக்கு முன்னர் திடீரென மரணமடைந்து விட்டார், அதன் பின்னர் கடையைக் கையேற்ற சரஸ்வதி அதனை தற்போது நடத்தி வருகின்றார். அவரின் மூன்று பிள்ளைகளும் பாடசாலைக்கு செல்லும் நிலையில், வீட்டு வாடகையாக மாதாந்தம் 20,000 ரூபாயை செலுத்த வேண்டியுள்ளது. அவரின் நிதியியல் சிரமங்கள் அவரின் முன் மலைபோல் குவிந்துள்ளன. அவரின் திடமான மனவுறுதிக்கு மத்தியிலும், நிம்மதியான வாழ்வை அமைக்க வேண்டும் என இந்த சுயதொழில் செய்யும் பெண் கொண்டுள்ள கனவு நனவாவது எட்டாக்கனியாகவே உள்ளது.)

# திருமலை வடக்கு கல்வி வலயத்திற்குட்பட்ட ரோட்டவெவ முஸ்லிம் மஹா வித்தியாலயம் மூடப்படும் நிலை

(எப்.முபாரக்)

திருகோணமலை வடக்கு கல்வி வலயத்திற்குட்பட்ட றொட்டவெவ முஸ்லிம் மஹா வித்தியாலயம் மூடப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாக பெற்றோர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இந்தப் பாடசாலை அனுராதபுரம்-திருகோணமலை ஆகிய மாவட்டத்தின் எல்லையாக காணப்படும் றொட்டவெவ கிராமத்தில் அமைந்துள்ளது.

திருகோணமலை வடக்கு கல்வி வலயத்தில் இரண்டு முஸ்லிம் பாடசாலைகள் காணப்படுவதுடன் அதில் மிக முக்கியமான பாடசாலை இந்த பாடசாலை ஆகும்.

இப்பாடசாலை க.பொ.த உயர் தரம் வரை தரம் உயர்த்தப்பட்டிருக்கின்ற நிலையில் 20 ஆசிரியர்கள் தேவைப்படுகின்ற போதிலும் 13 ஆசிரியர்களே கடமையாற்றி வருகின்றனர்.

இதில் இரண்டு ஆசிரியர்கள் வெளிநாடு சென்றுள்ளதுடன் மற்றுமொரு பெண் ஆசிரியர் ஆசிரியர் கலாசாலைக்கு சென்றுள்ளனர்.

அத்துடன் தற்போது கடமைக்கு உள்ள 13 ஆசிரியர்களில் நான்கு ஆசிரியர்கள் உட்பட தற்போதைய அதிபர் இடமாற்றம் பெற்று செல்வதற்கு விண்ணப்பித்துள்ளதுடன் அரசியல்வாதிகளின் செல்வாக்குடன் இடமாற்றம் பெற்றுச் செல்வதற்கு முயற்சி செய்து வருவதாகவும் பெற்றோர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இதே நேரம் 240 மாணவர்கள் கல்வி பயின்று வந்த நிலையில் வேறு பாடசாலைகளுக்கு பெற்றோர்கள் தமது மாணவர்களின் விலகல் கடிதங்களைப் பெற்று வேறு பாடசாலைகளுக்கு அழைத்துச் செல்வதையும் அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.





## பெற்றோர்கள் கவலை தெரிவிப்பு

விவசாயம், மீன் பிடி மற்றும் சேனைப் பயிர்ச் செய்கை போன்றவற்றை நம்பி வாழ்ந்து வரும் இம்மக்களின் பிள்ளைகளின் கல்வி நிலை கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது. அதேநேரம் பாடசாலையின் முகப்பு தோற்றம், பாடசாலையின் வளாகம், பாடசாலையின் விளையாட்டு மைதானம் போன்றவற்றின் நிலை பார்ப்பதற்கும் மிகவும் மோசமாக காணப்படுகின்ற நிலையில் பெற்றோர் ஆசிரியர் சங்கம் இருந்த போதிலும் பாடசாலையின் குறைபாடுகள் குறித்து அதிபர் மற்றும் ஆசிரியர்கள் பெற்றோர்களை தெளிவு படுத்தாமல் தாங்கள் இருக்கும் வரை இருந்து விட்டுச் செல்வோம் என்ற நோக்கில் செய்யப்பட்டு வருவதாகவும் பழைய மாணவர் சங்கத்தின் பிரதிநிதியொருவர் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

தான் ஒரு அரச ஊழியராக இருந்த போதும் பாடசாலை பெற்றோர் அபிவிருத்தி சங்கம் காணப்பட்ட போதும் பாடசாலையின் அதிபருக்கு ஏற்ற விதத்தில் நிர்வாகத்தை தெரிவு செய்து வருவதாகவும், பழைய மாணவர்களுக்கு கூட பாடசாலையின் குறைபாடுகள் குறித்து தெரியப் படுத்துவது இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார். மேலும் இந்த பாடசாலையின் ஒழுக்க விழுமியங்களை கலாச்சார விழுமியங்களை மாணவர்களின் ஒழுக்க விதிமுறைகளை ஒரு நாள் கூட பெற்றோர்களுடனோ அல்லது பழைய மாணவர்களுடனோ அதிபர், ஆசிரியர்கள் பேசுவதில்லை எனவும் பழைய மாணவர் சங்கத்தின் மற்றுமொரு பிரதிநிதி தெரிவித்தார். திருகோணமலை வடக்கு கல்வி வலயத்தில் இரண்டு முஸ்லிம் பாடசாலைகள் காணப்படுகின்ற போதிலும் அப்பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை அதிக அளவில் காணப்படுகின்றது.

பாடசாலையின் அபிவிருத்தி மற்றும் குறைபாடுகள் குறித்து வலய கல்வி பணிமனைக்கு தெரியப்படுத்துவதற்கு பெற்றோர்களுக்கோ அல்லது பழைய மாணவர்களுக்கோ பாடசாலை அதிபரால் சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை எனவும் மற்றுமொரு பழைய மாணவர் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

றொட்டவெவ முஸ்லிம் மஹா வித்தியாலயம் தரம் உயர்த்தப்பட்டுள்ள நிலையில் கூட அப்பாடசாலையின் குறைபாடுகள் இன்னும் நிவர்த்திக்கப்படவில்லை.

திருகோணமலை வடக்கு கல்வி வலயம் இந்தப் பாடசாலை விடயத்தில் கவனயீனமாக செயல்படுவதையும் பெற்றோர்களையும் மாணவர்களையும் ஏமாற்றி கல்வி மேம்பாட்டிற்காக எவ்வித உதவியையும் செய்யாமல் அலட்சியமாக இருப்பதையும் அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.

ஆகவே கிழக்கு மாகாணம் கல்வி மட்டத்தில் ஒன்பதாவது இடத்தில் இருந்த போதிலும் இனிவரும் காலங்களிலாவது வலயக் கல்வி பணிப்பாளர்கள், மாணவர்களின் நலன் கருதி செயற்பட வேண்டும் எனவும் பெற்றோர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

றொட்டவெவ முஸ்லிம் மஹா வித்தியாலய மாணவர்களின் நலன் கருதி கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திருகோணமலை வடக்கு கல்வி நிலைய பணிப்பாளர் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மூடப்படும் நிலைக்கு வந்துள்ள இந்த பாடசாலையின் அபிவிருத்திக்காக செயல்பட வேண்டும் எனவும் அப்பகுதியிலுள்ள மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# மன்னார் தள்ளாடியில் இன ஐக்கியத்தை பிரதிபலிக்கும் விதத்தில் போசன் விழா









( வாஸ் கூஞ்ஞ)

2023ஆம் ஆண்டு பொசன் பண்டிகையை முன்னிட்டு மன்னார் தாளடி சந்தியில் மன்னார் தள்ளாடி பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் தளபதியின் கருத்தின்படி 54ஆவது படைத் தலைமையகத்தின் கட்டளைத் தளபதியின் வழிகாட்டல் மற்றும் பூரண மேற்பார்வையின் கீழ் இராணுவ பொசன் வலயம் 03.06.2023 அன்று பிரமாண்டமான முறையில் ஆரம்பமானது.

மன்னார் மாவட்டத்தில் வாழும் அனைத்து இனங்கள் மற்றும் மதங்களுக்கிடையில் ஒத்துழைப்பையும் நல்லிணக்கத்தையும் வளர்க்கும் நோக்கில் இலங்கை இராணுவத்தினால் இந்த பொசன் வலயம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட செயலாளர் , பாதுகாப்பு திணைக்கள தலைவர்கள் , பிரதேச சர்வமத தலைவர்கள் , பொது மக்கணள் என 4000 இற்கும் அதிகமானோர் இந்த விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்திருந்தார்கள்.

மூன்று நாட்கள் நடத்த ஏற்பாடுகள் செய்த இந்த பொசோன் பிரதேசத்தில் அழகிய தோரணராஜா மிஹிந்தலா பிரதி போன்ற பல அழகிய விளக்குகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன

மேலும் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் பக்தி பாடல் நிகழ்ச்சியும் அங்கிருந்த அனைத்து பொது மக்களுக்கும் அரிசி கோவில் ஒன்றும் இடம்பெற்றது.

இந்த பொசோன் பகுதி அப்பகுதி தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு ஒரு புதிய அனுபவமாக இருந்ததுடன் அனைத்து அம்சங்களையும் தமிழில் விளக்கியமை அப்பகுதி மக்களால் பெரிதும் பாராட்டப்பட்டது.

இந்த பொசோன் பிரதேசத்தை ஒழுங்குபடுத்துவது தொடர்பில் இலங்கை இராணுவம் பிரதேசத்தின் அனைத்து உயர் அரச அதிகாரிகள் மற்றும் சமயத் தலைவர்களின் அங்கீகாரத்தைப் பெற்று அப்பிரதேசத்தின் மத நல்லிணக்கத்திற்கும் ஒத்துழைப்பிற்கும் பெரும் உதவியாக இருப்பதாக அனைவரும் கருத்து தெரிவித்தனர்.

# உலக சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு மாபெரும் மரநடுகை திட்டம் முன்னெடுப்பு





(பாறுக் ஷிஹான்)

உலக சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு (ஜுன் 05 ) இயற்கையின் சுவாசத்தை வளர்ப்பதற்கான ஒரு பெருநிறுவன சமூகப் பொறுப்பு தொனிப்பொருளில் 10 ஆயிரம் மரங்களை நடுதல் தொனிப்பொருளில் சியபதவிலிருந்து தாய் நிலத்திற்கு எனும் சம்பத் வங்கியின் நிதி நிறுவனமான சியபத நிறுவனத்தின் ஏற்பாட்டில் பல்வேறு நிறுவனங்களில் மர நடுகை திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அம்பாறை மாவட்டம் கல்முனை பகுதியில் அமைந்துள்ள 18 ஆவது விஜயபாகு காலாட் படைப்பிரிவில் மரநடுகையின் ஆரம்ப கட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.இதன் போது கல்முனை இராணுவ முகாமின் இரண்டாவது நிர்வாக கட்டளை அதிகாரி மேஜர் தயானந்த மற்றும் சியபத நிதி நிறுவனத்தின் கிழக்கு மாகாணத்திற்கு பொறுப்பான பிராந்திய முகாமையாளர் முஹம்மட் பிரிம்சாத் அந்நிறுவனத்தின் கல்முனை கிளை முகாமையாளர் முஹம்மட் பாயிஸ் அதன் ஊழியர்களான ஏ.ஜவாத் ,எம்.ரி.எம்.முஜீப், ஏ.ஆதீஸ் ,வி.திசிதரன், எஸ்.அஜய், என்.பவாகரன்,ஏ.ஏ.ஏறிஹான், ஆகியோர் கலந்து கொண்டனர்.

பின்னர் அதன் தொடர்ச்சியாக அருகில் உள்ள கல்முனையில் அமைந்துள்ள ஸ்ரீ லங்நா நெள தீகாயு கடற்படை முகாமில் இத்திட்டம் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டன.இதன் போது குறித்த முகாமின் கட்டளையிடும் அதிகாரி பி.இ.எம்.டி தம்மிக கலந்து கொண்டு உத்தியோகபூர்வமாக இத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இதே வேளை சாய்ந்தமருது கோட்டக் கல்வி அதிகாரி என்.எம்.எம் மலீக் தலைமையில் சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலயத்திலும் மர நடுகை திட்டமானது முன்னெடுக்கப்பட்டது. இதன் போது சாய்ந்தமருது கல்வி கோட்டத்தை சேர்ந்த 09 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு பெறுமதி வாய்ந்த மரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இந்நிகழ்வில் சியபத திதி நிறுவனத்தின் கிழக்கு மாகாண பிராந்திய முகாமையாளர் முஹம்மட் பிரிம்சாத் சியபத நிதி நிறுவன கிளை முகாமையாளர் முஹம்மட் பரீஹ்,கல்முனை கிளை முகாமையாளர் முஹம்மட் பாயிஸ் , அதன் ஊழியர்களான ஏ.ஜவாத் ,எம்.ரி.எம்.முஜீப், ஏ.ஆதீஸ் ,வி.திசிதரன், எஸ்.அஜய், என்.பவாகரன்,ஏ.ஏ.ஏறிஹான், ஆகியோர் கலந்து கொண்டனர்.

பின்னர் குறித்த பாடசாலை வளாகத்திலும் மரநடுகை முன்னெடுக்கப்பட்டன.

இந்த மாபெரும் மர நடுகை திட்டத்தில் தென்னை ,மாமரம், தோடை, மாதுளை ,ஜம்பு ,முந்திரிகை, உள்ளிட்ட மரங்கள் உள்வாங்கப்பட்டு நடப்பட்டதுடன் அதிகமான இராணுவத்தினர், கடற்படையினர், அதிபர்கள், ஆசிரியர்கள் , ஆர்வத்துடன் பங்கேற்று இருந்தனர்.

எதிர்காலத்தில் சூழலை பசுமையாக்கும் திட்டத்தின் கீழ் பொது இடங்கள் கடற்கரைப் பிரதேசங்கள் அரச நிறுவனங்கள் தனியார் நிறுவனங்கள் மத ஸ்தாபனங்கள் இவயல் காணிகள் உள்ளிட்ட சகல இடங்களிலும் பொதுமக்களின் பங்களிப்புடன் இத்திட்டம் சியபத நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட உள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

# டெங்கு பரவலை கட்டுப்படுத்துவதற்கான விசேட கலந்துரையாடல்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பில் டெங்கு பரவலை கட்டுப்படுத்துவதற்கான விசேட கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் (05) இடம் பெற்றது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அவர்களின் வழிகாட்டலின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்குவை ஒழிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

மாவட்டத்தில் அண்மைக்காலமாக டெங்கு நோய்த்தாக்கம் அதிகரித்து வருவதுடன் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மாவட்டமாக காணப்படுவதனால் அதிகமாக டெங்கு நுளம்பு பரவக்கூடிய பிரதேசங்களை அடையாளம் கண்டு அவற்றை அழித்தல் மற்றும் டெங்கு பரவக்கூடிய வகையில் பேணியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. மேலும் பராமரிப்பின்றி காணப்படும் இடங்கள் மற்றும் வீடுகளிற்கு பொலிசாரின் உதவியுடன் சென்று சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் பாடசாலை மாணவர்கள் அவர்களது வீடுகளில் மேற்கொள்வார்களாயின் கட்டுப்படுத்த முடியும் என துறை சார் நிபுணர்கள் கருத்து தெரிவித்ததுடன் ஒவ்வொரு பாடசாலைகளிலும் டெங்குவை கட்டுப்படுத்துவதற்கு பொறுப்பாக ஒரு ஆசிரியரை நியமித்து கண்காணிப்பு பணியினை மேற்கொள்ள வேண்டும் என கலந்துரையாடப்பட்டது. இதன் போது டெங்கு நுளம்பு பரவலை கட்டுப்படுத்துவதற்கு தேவையான ஆலோசனை மற்றும் வழிகாட்டல்கள் அரசாங்க அதிபரினால் வழங்கப்பட்டது.

இந் நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சினி ஸ்ரீகாந்த் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜீ.சுகுணன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சசிகலாபுண்ணியமூர்த்தி, பிரதேச செயலாளர், வைத்தியர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், துறைசார் நிபுணர்கள்,முப்படை அதிகாரிகள், பொலிசார், திணைக்களதலைவர்கள்,கல்வி பணிப்பாளர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள், மற்றும் உயர் அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர்.